சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 27 | நள ௵ ஐப்பசி ௴ 1௳ [17—10—76] | இதழ் 10

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3|19, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 33. தண்ணீர் விளக்கேற்றிய தருமமூர்த்தி

திருச்சிற்றம்பலம்

நாகரிகமென்ற பெயரால் பழமையைச் சாடுவார் நம் காலத்தவர் சிலர், புட்பகவிமானம் எனப் புராணம் கூறினல்

புராணப்புளுகு என்பவர் வெள்ளைக்காரன் ஆகாய விமானம் எனக் கண்டு பிடித்தது'ம் அவனது அடிவருடத்தொடங்கினர்.

இந்திரன் வளநகர்க்கு ஏகுவார்: எழில்
சந்திரன் உலகினைச் சார்குவார்.

என்று கம்பர் போன்ற புலவர்கள் கூறினால், பொய்யெனக் கூறுபவர், மேல்நாட்டுக்காரர்கள் சந்திரனையும் செவ்வாயை யும் அடைந்தோம். எனக் கூறும்போது எப்படி நம்புகின் றனர் என்றே புரியவில்லை. திருவாசகத்தை டாக்டர் போப் மொழி பெயர்த்ததையும் க்ரிப்பித் (Griffith) மொழிபெயர்த்த இராமாயணத்தையும் ஆங்கிலத்தில் படித்துவிட்டு அழகு அழகு என்கின்றனர். அவற்றை நாமே நேரில் படித்து இன் புறலாம் என்ற உணர்ச்சி நம்மவரில் சிலருக்கு அயல்நாட்டு மோகம் காரணமாக மறந்துவிடுகிறது.

இறையருள் இருந்தால் எதையுமே சாதிக்கலாமென்பது நம்மவர் புரிந்து கொள்ள வேண்டியதொன்றாகும். சென்ற 5—10—1823ல் பிறந்த அருட்பிரகாச வள்ளலார் கருங்குழி என்ற ஊரில் திரு, வேங்கடராம ரெட்டியார் என்பவரது இல்லத்தில் எண்ணைக்குப் பதில் தண்ணீரை விட்டு விளக்கை எரித்தார் என்பது வரலாறு.

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கனல்ல அருட்பா முறையைத்
துங்கமுற மாண தொழு.

என்று மதுரை ஸ்ரீ-ல-ஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் வாக்கும்.

மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்கில்லை யென்றார் மேலோர்: நானும்
பொய்விளக்கே விளக்கென உட்பொங்கி வழிகின்றேன்! ஓர்புதுமையன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னநகர் நண்பர்களே! செப்பக் கேளீர்!
நெய்விளக்கே போன்றொரு தண்ணீர்விளக்கும் எரிந்தது சந்நிதியின் முன்னே.

என்று அருட்பிரகாச வள்ளலாரின் வாக்கும் இறையருளால் எதையும் சாதிக்க முடியுமென்பதைக் காட்டுகின்றன. இறை வனின் மீது அன்பு செலுத்தி அவனருளால் தண்ணீர் விளக்

கெரித்த பெரியவர் நமிநந்தியடிகள் என்பது பெரியபுராணம் நமக்கு அளிக்கும் அழகிய கதை.

தஞ்சைஜில்லாவில்திருவாரூரிலிருந்துதிருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் திருமப்பற்று (நெய்ப்பேறு) என்றும் தற்காலம் வழங்கும் ஏமப்பேறூர் என்பது நமிநந்தியடிகள் அவதரித்த திருத்தலம். வேதத்தைப் பயில்வோருக்குப் பாச நீக்கமும் சிவப்பேறும் உண்டாகும். அவ்வூரில் சிவபெருமானே தெய்வம் என எண்ணித் திருநீற்று நெறியில் வாழ்ந்தவர் நமிநந்தியார், ''கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர்'' என்றபடி இவ்வுலகத்தில் சிவபெருமானை வணங்கி, வீடுபேறடைந்தாலும் அதுவே வேண்டுமென்ற கொள்கையுடையவர்,

திருவாரூர்ப் பெருமானிடம் பேரன்பு பூண்ட இவர் அடிக்கடி சென்று தரிசித்துவரும் வழக்கம். ஒருநாள் திருவாரூர்ப் பெருமானை தரிசித்து திரும்பும் போது, அண்மையிலிருந்த அரநெறி என்ற திருக்கோயிலைத் தரிசிக்க எண்ணியுட் புகுந்தார். உள் புகுந்தபோது எண்ணற்ற தீபங்களிருந்தும் ஏற்றப்படாமலிருந்தது கண்டார். தனது இல்லம் சென்று எண்ணெ கொண்டு வரலாமென எண்ணினர். போய்வர நேரமாகுமென எண்ணி, அங்கு ஒரு வீட்டில் நெய் வேண்டிப் புகுந்தார். அது சமணர் வீடாயிருந்தது. ''கையில் நெருப்புடைய உம் தெய்வத்திற்கு தீபம் தேவையில்லை. விளக்கு வேண்டுமென்றால் குளத்திலுள்ள நீரை முகந்து ஏற்றும்' எனப் பதில் கிடைத்தது.

கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்குமிகை கானும்
நெய்யிங்கில்லை! விளக்கெரிப் பீராகில் நீரைமுகந் தெரித்தல்
செய்யும் என்று திருத்தொண்டர்க்கு உரைத்தார்'தெளியாதுஒருபொருளே
பொய்யும் மெய்யும் ஆம்என்னும் பொருள் மேற்கொள்ளும்புரை நெறியார்.

சமணர் எதையும் தெளிந்தறியாதவர், அத்தி-நாத்தி (உண்டு-இல்லை) என்று ஒரே பொருளைக் கூறுபவர். பதிலும் தண்ணீர் உண்டு, நெய் இல்லை என்று கூறினர் மதியாது இவ்வாறு அமணர் கூறியது கேட்டு வருந்திய நாயனர், திருக்கோயில் வந்தபோது ''கவலை வேண்டாம். அருகிலுள்ள குளத்திலி

ருந்து நீரை எடுத்து அகல்களில் ஊற்றி ஏற்றுக'' என ஒரு வாக்கு எழுந்தது. கங்கையணிந்த பிரான் கங்கையையேவிளக் கிற்கு எண்ணெயாக அருளினார். திருக்குளத்தின் ஓரத்தில் நீரெடுத்தால் மனிதர் குளித்திருப்பார். மாடு குளிப்பாட்டி யிருப்பார். அதனால் குளத்தின் நடுவில் இறங்கி நீரெடுத்து வந்து விளக்கெரித்தார். பொழுது விடியுமட்டும் விளக்குநின்று எரிந்தது. பொழுது புலர்ந்ததும், வீடுசென்று தன் ஆன் மார்த்த பூசையை முடித்து, மாலையில் திரும்பி, கோயிலின் முன்தினம் போல் நீர் விளக்கெரித்தார்.

சின்னாட்கள் கழித்துத் தண்டியடிகள் காரணமாககலகம் எழுந்து அமணர் அழிந்து, திருவாரூரின் பெருமை ஓங்கியது. அரசன் நமிநந்தியடிகளின் பெயரால் நிபந்தங்கள் ஏற்படுத்தினான்.

இவ்வாறிருக்க ஒருநாள் திருவாரூப் பெருமான் திருமண லிக்கு எழுந்தருளினார். நமிநந்தியடிகள் ஏழை, பணக்காரர், உயர்ந்த தாழ்ந்தசாதி என்ற பேதமில்லாமல் தரிசித்துமீண்டும் தன் இல்லம் சேர்ந்தார்.

தேவர்பெருமான் எழுச்சி திருமணலிக் கொருநாள் எழுந்தருள
யாவரென்னுது உடன் சேவித்து எல்லாக் குலத்திலுள்ளோரும்
மேவ: அன்பர்தாமுமுடன் சேவித்தணைந்து: விண்ணவர்தம்
காவலாளர் ஓலக்கம் அங்கேகண்டு களிப்புற்றார்,

அடிகளாரின் மனைவி ''பூசை முதலானவை முடித்து உணவு கொள்ள வருக!'' என அழைத்த போது ''மணலிப்பில் இறை வனைத் தரிசிக்கச் சென்றேன். எல்லோரும் என்மீதுபட்டனர், சிறிது சுத்தக் குறைவு, எனவே நீராடிப் பூசை முடிக்க வேணும். அதற்கான நீர் முதலானவை கொண்டுவா'' என் றனர் அடிகள். மனைவியாரும் வீட்டிற்குள் ஆவன கொண்டு வரச் சென்றனர். அதுபோது, நாயனார் தம்மையறியாமலே சிறிது அயர்ச்சி அடைந்து உறங்கினார், கனவிலே இறைவர் தோன்றி ''திருவாரூர்ப் பிறந்தவரெல்லாம் நம் கணங்களே! காண்க'' எனக் கூறினர்.

திடுக்கிட்டு எழுந்த நாயனார் ''இறைவரது பூசனையை அனுவசியமாகத் தாமதம் செய்தேனே!'' என எண்ணிவருந்தி

நிகழ்ந்ததை மனைவியாரிடம் கூறி, பூசனை முடித்து, மறுநாட் காலை திருவாரூர் செல்ல, அங்கிருந்த அனைவரையும் சிவகணங் களாகவே கண்டு இறைஞ்சி வணங்கினார்.

தெய்வப்பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லோரும்
மைவைத்தனைய மணிகண்டர் வடிவேயாகிப் பெரு கொளியால்
மொய்வைத்தமர்ந்த மேனியராம் பரிசுகண்டு முடிகுவித்த
கைவைத்தஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார்.

''அடியேனது பிழை பொறுக்க வேணும்'' என இறைவனை வணங்கித் திருவாரூரிலேயே குடியேறினார்.

அவரது பெருமை கண்ட அப்பர் சுவாமிகள் ''தொண் டர்க்கு ஆணி'' என்று,

ஆராய்ந்து அடித்தொண்ட ராணிப்பொனு ரூரகத்தடக்கி
பாரூர் பரிப்பத்தம் பங்குனியுத்தரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாதனடித் தொண்டன் நம்பிநந்தி
நீராற்றிரு விளக்கிட்டமை நீணுடறியுமன்றே.

தமது தேவாரத்திலும் சம்பந்தப் பெருமான்,

தாவியவனுடனிருந்தும் காணாத தற்பரனை
ஆவிதனில் அஞ்சொடுக்கி அங்கணனென்று தரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தியடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே.

எனத் தமது தேவாரத்திலும் சிறப்பித்துப் பாடினர்.

சின்னாட்கள் பல தொண்டுகள் செய்த நமிநந்தியடிகள் திருவாரூர்ப் பெருமான் திருவடி நீழலடைந்தார்.

### சுந்தரமூர்த்தி நாயனர் துதி

நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள்
உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்
தாட்டாமரையின் மடுவின் கண்
தனி மாமுதலை வாய்தின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சைவ சமயத்தின் மாண்பு 5

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

நமக்கு ஆறு அறிவுள்ள மானிட உடலைத் தந்தும் நாம் வாழ்வதற்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுத்தும் அவை உண்டாவதற்கு வேண்டிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலிய பூதங்களையும் ஈந்தும் நம்மையெல்லாம் வாழ்வித்து வருகின்றவன் எல்லாம் வல்ல, முற்றறிவுடைய, முடிவில்லாத ஆற்றல் மிக்க இறைவனே என்பதில், இறை பக்திகொண்ட யாவருக்கும் ஐயம் இருக்காது அப்படிப்பட்ட பெருங்கருணைப் பெம்மானாகிய இறைவன் மனிதராகப் பிறந் திருக்கிற நம் ஒவ்வொருவருக்கும் நாம் முற்பிறவியில் செய்த புண்ணிய பாவச்செயல்களுக்குத் தக்கபடி ஒரு நியாயத்தீர்ப்பு அளித்து, இம்மண்ணுலகிற்கு நம்மை அனுப்பி வைத்து, ஆட்சி செய்து வருகின்றான். நமது வாழ்க்கையில் நம் ஒவ்வொரு வருக்கும் வருகின்ற புகழ், இகழ், இன்பம், நோய், மூப்பு, சாவு ஆகிய ஆறும், நாம் நமது தாயாரின் வயிற்றில் கருவாக வருமுன்னரே இறைவனால் தீர்மானிக்கப் பெற்றவையே இப் பேருண்மையை, தமிழகத்தின் தலைசிறந்த தத்துவ ஞானி களில் ஒருவரான அருள்நந்திச் சிவாச்சாரிய சுவாமிகள்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

திருத்தொண்டர் புராணத்தினை "அருள்மொழி அமுது"
என்ற தலைப்பில் ஸ்ரீ ராமநாமப்பரதேசி
எழுதிவரும் முதற்பாகம் முற்றிற்று.
சேக்கிழார் பெருமானும் இத்துடன் முதல் காண்டத்தை
முற்றுவித்தமையால், அவரருளாலே அவரையே
பின்பற்றி முடித்தாம்.
சேக்கிழார் பெருமான் திருவடிகளே சரணம்
திருச்சிற்றம்பலம்

"பேறு இழவு இன்பமொடு பிணி மூப்புச் சாக்காடு என்னும்
ஆறும் முன்கருவுட்பட்டது; அவ்விதி, அனுபவத்தால்
ஏறிடும், முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது?
தேறுநீ இனிச் செய் கன்மம் மேலுடற் சேருமன்றே"

என்று தனது நூலான சிவஞான சித்தியாரில் மிகத் தெளிவாக விளக்கியருள்கின்றார்.

இப்பேருண்மையை, எம்மதத்தவரும் மறுக்கமுடியாத முறையில் ஒப்புக் கொள்வதற்கு, இந்தியாவில் உள்ள நாடி ஏடு என்ற இரேகை சாத்திரம் (Palm-leaf astrology) சான்று பகருகின்றது. ஒருவருடைய கைகளைப் பார்த்து, அதிலுள்ள கோடுகளையும், புள்ளிகளையும் கொண்டு அவர் பிறக்கும்பொழுது எங்கெந்தக் கிரகம், எங்கெந்த இடத்தில் இருந்தது என்றும், அதனால் அவருடைய பெயரும், ஊரும் பெற்றோரும், படிப்பும், திருமணமும், உத்தியோகமும் மற்றும் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளும் என்னவிதமாக இருக்கும் என்றெல்லாம் மிகத் தெளிவாகக் கூறப்பெறுகின்றது.

சுருக்கெழுத்தைப் பற்றி (Short-hand) எல்லோரும் அறிவர். அதிலுள்ள ஒவ்வொரு புள்ளியும், கோடும் பொருளுடைய எழுத்தாகிறது. அந்தச் சுருக்கெழுத்தைப்பற்றி அறியாதவர்கள் ஏதோ கிறுக்கியிருக்கிறது என்றுதான் சொல்வார்கள். அதனைத் தெரிந்தவர்கள் மட்டுமே, தாங்களும் புரிந்து, மற்றவர்களும் புரிந்து கொள்ளுமாறு எடுத்துச்சொல்வார்கள். அதுபோலவே, நமது கைகளில் இருக்கின்ற ரேகைகளை சாதாரணமானவர்கள் வெறும்கோடு என்றுதான் சொல்வார்கள். ஆனால், அந்த ரேகை சாத்திரத்தை நன்கு உணர்ந்தவர்கள், அதனைத் தாங்களும் புரிந்து, மற்றவர்களும் புரியுமாறு எடுத்துக் கூறுவார்கள். எனவே, நமது ரேகையைப் பார்த்து, நமது பிறந்த நேரமும், பெயரும் சொல்லப் பெற்று அவை சரியாக இருக்கிறதென்றால், நாம் பிறக்குமுன்னரேயே நாம் பிறக்க வேண்டிய நேரமும், பெயரும் ஆண்டவனால் தீர்மானிக்கப் பெற்றவையே என்ற உண்மை புலனாகின்றதல்லவா? இவ்வுண்மையை எம்மதத்தவராக இருப்பினும், சோதித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம்

இயேசுநாதருக்கும் (Jesus christ) யோவான் ஸ்நானக ருக்கும் (John the Baptist) பெயர்கள், அவர்கள் பிறக்கு முன்னரேயே கடவுளால் தீர்மானிக்கப் பெற்று, தேவதூதர் மூலம், 'இவ்வுலகில் உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பெற்றவை யாகும். இதுபோலவே, உலகத்தில் பிறந்திருக்கிற மனிதர் கள் எல்லோருக்கும் கடவுள்தான் பெயரிட்டிருக்கிறுர் என்ற உண்மை பெரும்பாலோருக்குத் தெரியாது. உலகத்தில் மனி தர்களுக்கு மட்டுமே தனித்தனி பெயர் கொடுக்கப்பெற்றிருக் கிறது இதனை உணர்த்தவே, கிறித்துவ வேத நூலாகிய பைபி ளில், பிரசங்கி ஆகமம்6-ஆம் அதிகாரம் வசனம்10ல் இருக்கி றவன் எவனும் தோன்று முன்னமே பெயரிடப் பெற்றிருக் கிறுன். அவன் மனுஷன் என்று தெரிந்திருக்கிறது. (Ecclesastes; Chap. 6 Verse 10, "That which had been is named already (Before birth) and it is known that it is man") என்றும், கைரேகை சாத்திரம் குறித்து, யோபு ஆகமம் அதிகாரம் 37, வசனம் 7 ல்'' தாம் உண்டாக்கின சகல மனுஷரும் தம்மை அறியும் படிக்கு அவர் சகல மனுஷ ருடைய கையையும் முத்தரித்துப் போடுகிறுர் (Job Chapter 37 Verse 7. He (god)sealeth up the hand of every man; that all men may know His work") என்றும் கூறுகின்றது.

பொதுவாக, இவ்வுலகத்தில் உள்ள பெற்றேர்கள், தங் களுக்குக் குழந்தைகள் பிறந்த பின்னர் ஆணு, பெண்ணு என்றுபார்த்துத்தான் பெயரிடமுடியும். அப்படித்தான் பெய ரிடுகிறுர்கள். ஆனல், கடவுளுக்கோ பிறக்க வேண்டிய குழந்தை ஆணு? பெண்ணு? என்பது முன்னமே தெரியுமாத லால், அதற்குரிய பெயரையும், தலையெழுத்தையும் முன்ன ரேயே தீர்மானித்து விடுகிறுர். இந்தஉண்மை இந்துக்களுக்கு மட்டும் அல்ல, உலகத்தில் மனிதராகப்பிறந்திருக்கிற எல்லோ ருக்கும் ஏற்பட்டுள்ள பொது உண்மையாகும். இந்த உண் மையை எல்லா மதத்தினரும் சோதித்துப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம் என்று நாம்ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேம். அதன்படி பல இந்துக்களையும் கிறித்துவர்களையும், இசுலாமி

யர்களையும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையும் எங்கள் குருமகா சன்னிதானம் அவர்கள் சோதித்துப் பார்க்கும்படி சொல்லி, அவர்களும் குறிப்பிட்ட முகவரிகளுக்குச் சென்று, தங்களது கைரேகைகளைக் காட்டி சரிபார்த்து வந்து இந்தப் பேருண்மையை ஒப்புக்கொண்டு போயிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, அவர்களில் சிலரது பெயர்கள் அவரவரது ஏடுகளில் என்ன விதமாக வந்திருக்கிறது என்பதை இங்கு குறிப்பிடுகிறோம்.

நாகர்கோயில் ஆறுமுகநாவலரது ஏட்டில் அவரதுபெயர் "ஐந்தும் ஒன்றும் வதனம் எனப் பெயரும் சூட்டி" என்று வந்தது ஐந்தும் ஒன்றும் ஆறு; வதனம் என்றால் முகம் ஆறுமுகம் என்று ஆகின்றதல்லவா?

நமது "குமரகுருபரன்" பத்திரிகை வெளியாகும் இடமான ஸ்ரீவைகுண்டத்தில், ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவ அன்பர் ஒருவரின் பெயர் "சாவில் ஆறும், சாவில் ஒன்பதும் இவன் தன் நாமம் என்று வந்தது. 'ச' என்ற எழுத்து வரிசையில் ஆறாவது எழுத்து 'சூ' ஒன்பதாவது எழுத்து 'சை' என்று ஆகிறது இதுபோல, வெள்ளைக்காரர் ஒருவர் தனது கைரேகையைக் கொண்டு காட்டினார். அவருக்கு "முழத்தில் பாதி இவன்தன் நாமம்" என்று வந்தது. வெள்ளைக்காரரின் பெயர் "ஜான்" என்பதாகும்.

மதுரையிலிருந்து ஒரு இசுலாமிய அன்பர், கிறித்துவ வேடம் போட்டுக்கொண்டு, தனது உண்மையான பெயரைச் சொல்லாமல், கிறித்துவப் பெயரான "அந்தோணி" என்று தனது பெயரைச்சொல்லி, தனது கைரேகையை நாடி ஏடு ஜோதிடரிடம் காட்டினார். ஆனால் அவருக்கு "மக்கத்தைத் தொழும் சிக்கந்தர்" என்று வந்தது. நமது பெயரும், மதமும் நமதுகைகளில் அல்லவா எழுதப்பெற்றிருக்கிறது என்று அவர் இறைவனின் முடிவில்லாத ஆற்றலை எண்ணி வியந்து விட்டார்.

கோவையில் கௌமார மடாலயத்தை நிறுவிய தலைவருக்கு இராமக்குட்டி என்றும் குறிப்பிடப் பெற்றிருந்தது

திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி என்ற ஊரைச் சேர்ந்த சைவப் பெண் ஒருத்தியின் ஏட்டில் அவளது பெயர், 'உயிர் முன்னுய், "உ" லகரம் ஈராய் "ல" ஈரதன் மேல் ககரமுடன் "க" பெயரும் முற்றும்" என வந்தது. அவளது பெயர் உலகம்மாள் என்பதாகும். அவளது தந்தையார் பெயர், "அத்தன் பேர் சகரம் முன்னும் ('ச') அறியபின் ணகரமதாய ('ண்') பகரம் மேலும். ('ப') மேல தன்பின் ககரமுடன், ('க') மேலும் கேளாய் இணையும் மேல் வேலோன் கைஆயுதப்பேர் ('வேல்') சாலமேல் ஈசன் பின் மைந்தன் கூடும்" "முருகன்" என்று வந்தது. அவளது தந்தையார் பெயர், செண்பகவேல்முருகன் என்பதாகும்.

அடுத்து, நமது ஆதீனத்தின் 291வது குருமகா சன்னிதானம் அவர்களின் பூர்வாச்சிரமத் தம்பியார் திரு. கே. வி. கணபதியாபிள்ளை அவர்கள் திருநெல்வேலி கீழரதவீதியில் இருக்கும் நாடிஏடு ரேகை ஜோதிடர் திரு டி. எஸ். ஜி. சொக்கலிங்கம் பிள்ளையிடம் தன்னுடைய கைரேகைகளைக் காட்டி 1949ஆம் ஆண்டு ஏடு பார்த்தார்கள். அநாகத வேதம் என்னும் அந்த ஏட்டில் 11ஆம் காண்டத்தைப் பார்த்தபோது, அதில் நமது குருமகா சன்னிதானம் அவர்களைப்பற்றி நான்கு பாடல்கள் கூறப் பெற்றிருக்கின்றன. அப்பாடல்களின் பொழிப்புரையை மட்டும் இங்கே தருகிறேம்.

[1] தனியாக வாழ்க்கை செலுத்தும் இயல்புள தமையனுல் சேகரித்துள்ள பெருமைக்கு இடமான பொருளும், பிதாவினுல் சேகரித்துள்ள கணக்கற்ற பூமியும், மற்றும் உயரிய தானங்களும், பஞ்சமாதிபன் பூர்வ புண்ணியத் தானத்தில் இருப்பதால், அந்தக் காலமாகிய சனிதிசைமுடிவில் நன்மை கனியப் பெறாஉம்.

[2] பிற்கால சம்பாத்தியமும், தனவந்தனும் சுயசம்பாத்தியத்தால் நேரப்பெற்று (பூர்வாச்சிரமநிலை) அதன் பிற்காலத்திலும் (துறவுநிலை) சந்தனமரம் போலும், காமவல்லிக்கொடி படரும் கற்பகவிருக்ஷம் போலும் புகழ் உள்ளவன். கற்றறி

வுள்ள அறிஞரையும், வாழ்க்கைத் துணை இழந்தோனையும் உள்ளவனால், மனம் பெற்று முன்னேற இடமுள்ளது.

[3] இவ்வாறு ஆராய்ந்து எடுத்தாளப்பட்ட தமையன் இருவினையொப்பு, மலபரிபாகம் உற்ற சத்தினி பாதராயும், பொறுமை உடையவராயும், மனதை அடக்கித் தெய்வ வழி பாடு உடையவராயும் ஆடுஉக்குணம் நான்கில் ஒன்றாகிய கருமம் முடிக்கும் துணிபு உள்ளவரே. பிரமாந்திர ஸ்தான மாகிய சிரசில்சுக்கிலமணி திரண்டு லிங்காகாரமாய்ப்பொருந்தி யாவரும் தொழுமாறு அக்கினியால் அழியப் பெறுவாய. (அக் கினியால் உண்ணப்பெறுது.)

[4] அதிசயமாயும், புகழாயும் மழை மற்றால் நனையப் பெறுவாய்க் கோயில் கொண்டருளும் பாத்திரவான் ஒருவர் உளர். மற்ற உடன்பிறந்தார் யாவரும் பல ஜென்மங்கள் கொண்டுளார்'' என்று கூறப் பெற்றிருக்கிறது.

நமது குருமகா சன்னிதானம் அவர்களுக்குத் திருவரு ளால் கிடைத்த ஆழ்ந்தகன்ற அனுபவத்தையும் சைவசித்தாந் தத்தில் அவர்கள் பெற்ற ஆராய்ச்சி அறிவையும், கடந்த இரு பத்துநான்கு ஆண்டுக்காலமாக ஆதீனத்தில் அவர்கள் அரு ளாட்சி செய்து வருகின்ற திறனையும், திருவருள் உணர்த்த தன்னுடைய பேச்சால், எழுத்தால் இந்த மனித சமுதாயம் முழுமைக்கும் அவர்கள் நல்கியிருக்கின்ற பல்வேறுபட்ட வாழ்க்கைப் பேருண்மைகளையும் குறித்து விளக்கமாக, நாம் ஒரு தனிநூல் வெளியிடவேண்டும் என்று கருதியிருக்கிறோம். என்றாலும் மேலே குறிப்பிட்டுள்ள அநாகத வேதம் என்ற ஏட்டில்வந்த நான்கு பாடல்களின் பொழிப்புரையைப் படித் துப் பார்த்த அளவில், குருமகா சன்னிதானம் அவர்கள் எந்த அளவிற்குச் சிறப்பான, உயர்ந்த அருளாளர் என்பதனை, அன் பர்கள் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இங்கே ஒன்றை மட்டும் நினைவில் கொள்க! நமது குரு மகா சன்னிதானம் அவர்களுடன் பிறந்தவர்கள் மூத்த சகோ தரர்கள் இருவர். இளைய சகோதரர்கள் இருவர். ஆக நால்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 4

'சிவநெறித் தவமணி'
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை.
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## அநிந்திதையார் – சங்கிலியார் (முதற்பகுதி)

சென்ற இதழில், சுந்தரமூர்த்தி நாயனரைத் தந்த இசை ஞானிப் பிராட்டியாரைப் பற்றிச் சிந்தித்தோம். இவ்விதழில் சுந்தரர் திருக்கயிலையிலிருந்து இப்பூவுலகிற்கு வருவதற்குக் காரணமாய் இருந்த சேடியர் இருவரில் ஒருவரான அநிந்திதை யாரைப் பற்றிச் சிந்திப்போம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கயிலாயத்தில் சிவபெரு மானுக்கு அணுக்கத் தொண்டராய் இருந்தார், உமையம்மைக் கும் பணிபுரிய இருசேடிமார் இருந்தனர் அவர்கள் தாம் அநிந் திதையார், கமலினியார் என்பவர்களாம்.

சுந்தரர் மலர் பறிக்கக் கயிலையிலுள்ள திருநந்தவனம் சென்றார் அதேசமயத்தில் அநிந்திதை, கமலினி என்ற இரு வரும் சென்றனர் அப்பெண்களை நொடிப் பொழுது சுந்தரர் விரும்பிப் பார்த்தார். அது பிழை என்று உணர்ந்த சுந்தரர் திருவைந்தெழுத்து ஓதிச் சிவபெருமான் திருவடிகளில் மலர் களைச் சாத்தினர்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வர். ஆனால் கோடியில் ஒருவருக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய பிறவியற்ற 'ஜீவன் முத்தர்நிலை' இவர்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது? இக்கட்டுரையின் ஆரம்பத்தில்(5–வது பகுதியில்) குறிப்பிட்டுள்ள சிவஞானசித்தியார் பாடலைப்படி யுங்கள். அதில், ''அவ்விதி அனுபவத்தால் ஏறிடும், முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது? என்று கூறப்பெற்றி ருக்கிறது. முன்பிறவியில் அவர்கள் செய்த புண்ணியமே, இப்பொழுது உள்ள அந்த மேலான நிலைக்குக் காரணமாகும் என்பது தெளிவாகும்.

[தொடரும்]

நந்தவனத்தில் நடந்ததை அறிந்து சிவபெருமான், "சுந்தரா! நந்தவனத்தில் என்ன நடந்தது?" என்றுகேட்டார் ஞானிகளைத் தவிர வேறு யாரும் தான் செய்த குற்றத்தை ஒத்துக்கொள்ளமாட்டார்கள். சுந்தரர் தன் பிழையை ஒத்துக் கொண்டார். சிவபெருமானும் வேண்டுவார் வேண்டுவதை அளிப்பவர் ஆதலால், பூவுலகிற் சென்று அம்மாதர் இருவரையும் அடைந்து சிலகாலம் வாழ்ந்து மீண்டும் திருக்கயிலைக்கு வரத் திருவருள் புரிந்தார். சுந்தரரும் "ஐயனே மையல் மானுடமாய் மயங்கும்பொழுது தடுத்தாண்டருளவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அருணந்தி சிவாச்சாரியாரும்,

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது சாலஉயர் சிவஞானத்தாலே
போழிளமதியினனைப் போற்றுவார் அருள் பெற்றாரே"

என்றும் தாயுமானசுவாமிகளும்,

"வந்த வரவை மறந்து மிக்க
மாதர் பொன்பூமி மயக்கத்தில் ஆழும்
இந்த மயக்கை அறுக்க எனக்கு
எந்தை மெஞ்ஞான எழில்வாள் கொடுத்தான்
— சங்கர சங்கர சம்பு"

என்றும் அருணகிரிநாதரும்,

"வாடை பற்றும் வேளை அடாஅடா என
நீமயக்கம் ஏது சொலாய் சொலா யென
வாரம் வைத்த பாதம் இதோ இதோஎன—அருள்வாயே"

என்றும் பாடுகின்றனர்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்டுக் கொண்டபடி சிவ பெருமான் தடுத்தாண்டருளினர். அவ்வாறே அநிந்திதை கமலினி இருவருக்கும் உமையம்மையார் ஆணை பிறந்தது. அவர்கள் இருவரும் தென்புவியில் வந்து தோன்றினர்கள்,

அநிந்திதையார் தொண்டை நாட்டில் திருவொற்றியூருக்கு அருகில் உள்ள ஞாயிறு என்ற ஊரில் வேளாளர் மரபில் ஞாயிறுகிழார் என்பவருக்கு மகளாகப் பிறந்து சங்கிலியார் என்னும் பெயர் பூண்டு வளர்ந்து வந்தனர் .அவர் தனது

முன்னை உணர்வோடு உமையம்மையார்பால் மறவாத அன்பு கொண்டு வளர்ந்து வந்தார். இவ்வாறு, முன்னை அறிவுணர்வோடு பிறத்தல் புண்ணிய வசத்தாலேயே அமைவதாகும் மற்றையோர் இறைவனது திரோதான சக்தியால் மறைக்கப்பட்டு பிறக்கிறார்கள் அவ்வாறில்லா விட்டால் கருமங்களை அனுபவிக்க முடியாதல்லவா?

அம்மையார், யாவரும் அதிசயிக்கும்படி பக்தியில் திளைத்து வளர்ந்து பருவமடைந்தனர். பெற்றோர் இவருக்குத் திருமணம் பேசினர். இதனை அறிந்த அம்மையார் இறைவன் திருவருளைப் பெற்ற ஒருவருக்கே நான் உரியவள் என்று நினைந்து, நினைவிழந்து பூமியில் விழுந்தாள். பின்பு தெளிந்தவளாய்த், தன்னைத் திருவொற்றியூர்த் திருக்கோயிலுக்குத் தொண்டு செய்யுமாறு சேர்பிக்கப் பெற்றோரை வேண்டிக் கொண்டாள். அவர்களும் கோயிலுக்கு அருகில் கன்னிமாடம் ஒன்று அமைத்து அங்கு தங்கித் தவம் செய்யவும், சிவனுக்குத் தொண்டு செய்யவும் வசதிகள் செய்து சேடிமாரையும் அமைத்துத் தந்தனர். அம்மையாரும் பூர்வநிலையில் கயிலையில் தொண்டு செய்த வண்ணமே, செய்து கொண்டு வந்தனர்.

அந்நாளில் நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவத்தலங்களை வணங்கிக் கொண்டு திருவொற்றியூர்த் தலத்துக்கு வந்தார். ஒருநாள் தொண்டு செய்பவர்களுடைய திருத்தொண்டுகளைக் கண்டு மகிழ்ந்தனர். அதுசமயம் சங்கிலியார் பூத்தொடுத்து இறைவனுக்குச் சாத்தக் கொடுத்துவிட்டுச் சென்றதை, முன்னை ஊழ்வினையால் கண்டார். கண்டவுடன் திருக்கயிலையில் சிவபெருமான் அருளிய ஆணையின் வலிமையால் சுந்தரருடைய சிந்தை அம்மையார்பால் சென்றது, ''பொன்னும் மணியும் கலந்த ஒளியை அமுதிற் குழைத்துப் புதிய மதியின் நீர்மையாற் கலந்தமைத்த மின்னற் கொடிபோல்வார் என்னை உள்ளந்திரிவித்தாள்'' அவள் யார் என்று அருகிலுள்ளோரை வினவினர். அவர்கள் ''அவர்தாம் நங்கை சங்கிலியார். பெரிய தவத்தால் ஈசர் பணிபுரியும் கன்னியார்'' என்றனர். இப்பிறவியை இருவரால் இறைவர் பெறுவித்தார் எனவும்,ஒருவர் பரவையார், இவள் மற்றையவளாம்எனவும் மருண்டார்.

இறைவனைத் தோழராகக் கொண்ட சுந்தரர், இறைவனிடமே அவளைத் தந்தருளும்படி வேண்டினர். உமையம்மையைப் பங்கிலடைத்துக் கங்கையைத் தனது சடையில் கரந்த சிவபெருமானுக்கு, சங்கிலியைச் சுந்தரருக்குத் தருவது அரிய செயலாகுமோ? "சங்கிலியை உனக்குத் தருகிறோம். கவலை ஒழிக" என்றருளிய சிவபெருமான் கன்னிமாடத்துச் சங்கிலியார் கனவில் தோன்றி "சாரும் தவத்துச் சங்கிலி! என்றழைத்தார். நம்மிடம் மிகுந்த அன்பும், மேருவினும் மேம்பட்ட தவமும் உடையவனும், திருவெண்ணைநல்லூரில் உலகறிய நம்மால் ஆட்கொள்ளப் பட்டவனுமாகிய நம்பியாரூரன், உன்னைத் தரும்படி நம்மை வேண்டிக் கொண்டான். அவனை மணம் செய்து கொண்டணைவாயாக" என்றருளிச் செய்தனர்.

இச்சரிதத்திலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டுவன.

(1) நாம் ஒவ்வொருவருமே, நமது சுயஅறிவு கொண்டு முற்பிறவியில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி இறைவனால் ஒரு தீர்ப்புப் போடப் பெற்றே இப்பூவுலகில் பிறந்திருக்கிறோம்.

(2) திருமணங்கள் மேலுலகத்தில் தீர்மானமாகி அதன் படியே இவ்வுலகில் நடைபெறுகின்றன.

(3) சுந்தரர் போன்ற தவமுடையவர்களுக்கு இறைவன் நேரிலும், சங்கிலியார் போன்ற தவமுடையவர்களுக்கு இறைவன் கனவிலும் தோன்றி, பின்னால் நடக்கப் போவதை முன்னால் அறிவித்தருளுகின்றார். ஆகையால் எவ்வாற்றானும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது தவமே, வள்ளுவரும் "தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றையார் அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு" என்றார். தவத்தின் ஈட்டமே வேடுவனாய் இருந்த திண்ணனாரைத் திருக்காளத்தி மலைமேலிருந்த குடுமித்தேவர், திருக்கண் நோக்கம் செய்தது. கண்ணப்பராக்கும்படி செய்தது, அதுமட்டுமா? மந்திரியாய்இருந்த மாணிக்கவாசகரைக் கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி, நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி என்று உருகிப் பாடும்படி செய்து இறைவனால் ஆட்கொள்ளச் செய்தது. என்னே தவத்தின் பெருமை விரிக்கிற்பெருகும்.

அடுத்த இதழில், கனவிற்கும் நனவிற்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கி, சங்கிலியார் சரிதத்தைச் சங்கிலித்தொடர் கொள்வோம்.

———

[தொடரும்]

# "முக்கட்பெருமானும் மூத்தமகனும்"

திரு. புலவர் மீ. முருகையன் அவர்கள்,
எழுத்தர், ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்.

தொன்மை வாய்ந்தும், நெறிகளில் தனிசிறந்தும் துலங்குவது நமது சைவ நன்னெறி. "சைவத்தின் மேல் சமயம் வேறில்லை" என்று சொல்லுமளவிற்குச் சால்பு பெற்று விளங்குவதே அதன் தனித் தன்மைக்கு ஓர் சான்றாகும். இந் நெறி நின்றொழுகிய நிறைமொழி மாந்தர்களின்வாழ்க்கையைப் பெரியபுராணம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆண்டவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே ஏற்பட்ட அற்புத விளையாட்டுக்கள் அனைத்தும் பெரியபுராணத்தில்பெரிதும் பேசப்படுகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளுக்கும், அருள் ஞான சம்பந்தருக்கும் காட்சி தந்து கனியருள் புரிந்த அதே இறைவன், இருபதாம் நூற்றாண்டாகிய இன்றைய நாளில் நம்மனோர்க்கும் காட்சி தராமலா இருக்கின்றான்? கனியருள் புரியாமலா இருக்கின்றான்? இல்லை, இல்லை.

"பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. மற்றும்

"இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்"

என்பது மணிவாசகப் பெருமானின் மணிமொழி.

"மலர்மிசை ஏகினான் மாணடிச் சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என்ற குறளுக்கு உரைவிளக்கப் புகுந்த பரிமேலழகர் கூறுமா போலே அவன் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சேரும் இயல்பினன். அவ்வாறாயின் நம்மனோரும் அவனருளை வெளிப்பட உணர்

தல் யாங்ஙனம்? எனின், அதற்குத் "தெய்விக உணர்வுடன் கூடிய தெளிந்த ஞானம் தேவை".

அருள் நலம் பழுவிய அப்பெருமான் ஆன்மாக்களோடு அருள்புரிதற்காகவே விளையாடுகின்றான். அவன் தன் விளையாட்டு அறிதற்கரியது. ஸ்ரீ குமரகுருபர அடிகளின் சிதம்பர செய்யுட் கோவையில் ஓர் காட்சி. அது ஓர் முற்றிலும் மாறு பட்டக் காட்சி. தந்தையிடம் மகனின் விளையாட்டு. இல்லை இல்லை முக்கட் பெருமானிடம் மூத்த மகனாரின் திரு விளையாட்டு. ஆம். அது ஓர் அற்புத விளையாட்டு.

"கோமுனி வருக்கும் அரிதாய்முது மறைப் பனுவல்
கூறிய பரப்பிரமாம்
ஓமெனும் எழுத்தின் வடிவாய்நட நவிற்று புலி
யூரன் மகுடச் சடிலமேல்
மாமதியினைத் தனது கோடென் எடுப்பமத்
மாமுகன் முகக்கை தொடரத்
தூமதி பணிப்பகை எனுவர நதிப் புகவொர்
தோணி யென விட்டகலுமே"        [சி. செ. கோ. 53)

முக்கட் பெருமானின் சடைமுடியின் மேல் ஒலிபரப்பி விளங்குகின்றது பிறைச்சந்திரன். முக்கட் பெருமானின் மூத்த மகனார் நம் விநாயகப் பெருமான் அதனைக் காணலுற்றார். திடீரென்று பார்த்ததனால் அப்பிறைச் சந்திரனின் வடிவம் தனது கொம்பினைப் போல் அவருக்குத் தோன்றுகிறது. உடன் அதை எடுக்கும் எண்ணத்துடன் தனது தும்பிக்கையை மேல்நோக்கிச் செலுத்துகின்றார். தும்பிக்கையைக் கண்ட பிறைச்சந்திரனது அதனைத் தனது இயல்பு பகையாகிய பாம்பு என்று கருதி அஞ்சுறுகின்றது. அச்சத்துடனேயே அச் சந்திரன் அருகிலுள்ள கங்கையாகிய நதியின்கண் சென்று சேர்கின்றது பிறைச் சந்திரன் கங்கையில் சென்று சேர்ந்ததைக் கண்ட விநாயகப் பெருமான் அதனை நதியில் மிதக்கும் தோணி என்று எண்ணி அதனைப் பற்றுவதை ஒழிந்து நீங்குகின்றார்.

உலகத்து உயிர்களைக் காத்து அருள்புரிய வேண்டிய இவ்விருவரும் இப்படி விளையாடிக் கொண்டிருக்கிறார்களே என்று, இவ்விளையாட்டு நிகழ்ச்சியைக் கண்டவுடன் நம்மில் சிலருக்கு ஐயப்பாடு எழக்கூடும். அவ் ஐயத்திற்கேற்ற விளக்

கத்தை திருமுருகாற்றுப்படைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றார். ஆறுமுகச் செவ்வேளின் ஆறுமுகங்களில் ஆறாவது முகம்,

"குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல் வள்ளியோடு நகையமர்ந்து".

உள்ளதாக நக்கீரர் குறிப்பிடுகிறார். இவ்வரிகளுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும்பொழுது காமநுகர்ச்சி இல்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான் எற்றுக் கெனின், உலகில் இல்வாழ்க்கை இனிது நடத்தற்கென்க என்று கூறுகின்றார்.

அறுமுகச் செவ்வேள் தன் அன்புறு வள்ளியோடு அமர்ந்தினிது இருப்பது உலகில் இல்வாழ்க்கை இனிது நடப்பதற்காகவே என்பதன் மூலம் முக்கட் பெருமானிடம் மூத்த மகனாரின் விளையாட்டும் உலகில் தந்தைக்கும் மகனுக்குமிடையே ஓர் இன்ப அன்பு பெருகுதற்காகவே என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது.

மேலே குறிக்கப் பெற்றிருக்கும் ஸ்ரீ குமரகுருபர அடிகளின் அத்திருப்பாடல் இலக்கணத்திறனும், இலக்கியச்சுவையும் நிறைந்து இன்பம் பயக்க வல்லது. சந்தத்தொடர்செவிக்கு இனிமையூட்டுகின்றது. கற்பனைத் திறனும் கருத்திற்கு வளமூட்டுகின்றது. எழிற்புலியூர் எம்பெருமான் ஓமெனும் பிரணவ மந்திரத்தின் வடிவாய் விளங்குகின்றான் என்ற ஓர் அற்புதக் கருத்தும் அமைவரப் பெற்றது

இவ்வாறு மன்றில் நடம்பயிலும் முக்கட் பெருமானிடத்தில் மூத்த மகனாரின் திருவிளையாடலைப் படம் பிடித்துக் காண்பித்த அம் முனிவர் நம்மையும் பிறிதோர் பாடல் மூலம் அப்பெருமானின் அருள் பெற்றுய்வதற்கு வருக! என அழைக்கின்றார்.

"வம்மின் நமரங்காள் மன்றுடையான் வார்கழல் கண்டு
உய்ம்மினுறுதி பிறிதில்லை—மெய்ம் மொழிமற்று
என் மொழி பிழை யாதாகும்
பின் வழி நுமக்குப் பெரும் பயன் தருமே" (சி. செ. கோ. 83)

அம்முனிவரின் அறவழி நின்று அப்பெருமானின் அருளினைப் பெற்றுப் பின்வழி நாமும் பெரும் பயன் எய்திடப் பெரிதும் முயல்வோமாக!

# ஔவையார் அருளிய விநாயகர் அகவல் உரை விளக்கம்

"செந்தமிழ்ச் செல்வன்"
புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

31—40 தலம் ஒரு நான்கும் தந்து எனக்கு அருளி,
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறு தாரத்து அங்குஇசை நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

உரை விளக்கம்: மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்னும் நான்குவகையான சத்திநிபாத நிலைகளை உண்டாக்கி அவற்றில் யான் நிற்கும் வண்ணம் அருளைச்செய்து, மும்மலங்களுள்ஒன்றாய் அறியாமைக்குக்காரணமான ஆணவமலத்தை வேருடன் அறுத்து, ஒன்பது வாயில்களை உடைய உடலாகிய ஒப்பற்ற வீட்டின்கண் உள்ள, ஐம்புலன்களாகிய கதவுகளை மூடிச் சாத்துகின்ற வழிகளையும் காண்பித்து, மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம் அநாதகம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் பொருந்துகின்ற நிலைகளிலும் பெறுதற்கரிய பேறாக நிலைக்கும்படிச் செய்து தன்மையை நீக்கி மவுன நிலையை வருவித்து இடைபிங்கலை என்ற நாடிகளின் இயல்புகளையும், இவற்றிற்குரிய சம்-அம்-வங்சிங் என்னும் மந்திர எழுத்துக்களையும் அறியும்படி செய்து, இடைபிங்கலைகளில் உலவும் பிராணவாயுவினைச் சுழுமுனை நாடியின் இறுதியிற் செலுத்தும் வழிகளையும், அச்சுழுமுனை நாடி ஆறு ஆதாரங்களின் வழியே, மேல் நோக்கித் தலைக்குச் செல்லும் முறையையும், அவ்வாற்றால் அங்கங்கே நிகழும் அனுபவங்களை

யும் ஆற்றல்களையும் தெரிவித்து, அக்கினி, சூரியன் சந்திரன் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவிக் கொண்டு செல்லும் சுழுமுனை நாடியாகிய தூணின்கண், தொங்கிக்கொண்டிருந்து எழுகின்ற குண்டலினி சக்தியாகிய பாம்பை மூலாதாரத்தி னின்று துயில் நீங்கி எழும்படிச் செய்து,

41—50 குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்

**உரை விளக்கம்:** அக்குண்டலினிடத்தில் கூடிஇருக்கும் அசபை என்னும் மந்திரத்தை உரக்கச் சொல்லி, மூலாதார மான அக்கினி மண்டலத்தில் உறங்கிஇருந்து எழுப்பப்பெற்ற நெருப்பைப் போன்ற குண்டலினி சக்தியை மூச்சுக் காற்றி னுல் எழுப்புகின்ற வழியை அறிவித்து அமுதம் ஊற்றெடுக் கும் சகஸ்ராரம் என்பதன் நிலையினையும், சூரிய கலையாகிய பிங்கலை இயங்கும் இருதயப்பகுதியினையும், சந்திரக்கலையாகிய இடைகலை உயிர்ப்பின் தன்மையையும், இவற்றிற்கு நடுவே சுழுமுனை நாடியினது பதினாறு படிநிலைகளையும், உடலாகிய இயந்திரத்தின் பல்வேறு உறுப்புக்களின் நிலையையும் உணரச் செய்து, பிரணவத்தோடு கூட்டி, ஆறெழுத்தும் நான்கெழுத்து மாகச் சொல்லப்படும் தூலம் சூக்குமம் என்னும் திருவைந் தெழுத்துக்களை எண்ணிச் செபிக்கும் வகையில் இனிதாக எனக்கு அருளிச்செய்து,

51—60 புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிது எனக்கருளி

என்னை அறிவித்து, எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி, என்செவியில்

உரை விளக்கம்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் மனம் புத்தி ஆங்காரம் என்னும் எட்டாலும் அமைந்தநுண்ணுடல் புலப்படும்படி, அதன் எட்டு நிலைகளையும் எனக்குக் காட்சிப் படுமாறு செய்து, மனத்தினால் சகஸ்ராரம் என்னும் சக்கரத்தின் வாயிலைக் காணுமாறு செய்து, மேலான யோக நிலையில் இருக்குமாறுவைத்து தத்துவக் கூட்டங்களினின்று நீங்குதலை இனிதாக எனக்கு அருள்புரிந்து, உயிரின் நிலையை உணர்த்தி என்னை அருளால் தூய்மை செய்து, முன்னைவினையாகிய மூல கன்மத்தையும், அதன் முதலாகிய ஆணவ மலத்தினையும், வாதனைதோன்றாதபடி நீக்கிஒழித்து, சொற்களும் எண்ணங்களும் இல்லாமல் நீங்கிய மன ஒருமிப்புநிலையில், எல்லாத் தத்துவங்களையும் ஒடுக்கி, காமம் வெகுளி மயக்கங்களாகிய அழுக்குகளைப் போக்கி, எனதுஉள்ளத்தை தெளிவு அடையச்செய்து அறியாமை வடிவாயும், சுட்டறிவாயும் நின்றயான், சுட்டிறந்து உணரும் வியாபக அறிவாய் நிற்கும் நிலையை உணரும் வண்ணம் அருளால் தரப்படும் ஆனந்தத்தின் கண்ணே என்னை அழுந்தும்படிசெய்து.

61—72 எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்பு உள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சு அக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

**உரை விளக்கம்:** என்னுடைய பக்குவ நிலையில் முடிவு இல்லாத பேரின்பமாகிய துரியாதீத ஆனந்தத்தைக் கொடுத்து அந்நிலையினின்று மலங்களால் மறுபடியும் உலகியலில் மீளுத லாகிய துன்பத்தை ஒழித்து, அருள் வழியைக் காட்டி, ஓசை யாகிய புற உலகத்தில் சதாசிவத்தினையும் மனமாகிய அக உல கத்தில் சிவலிங்கத்தையும் காணும்படி செய்து, சிறியவற்றிற் சிறியதாகவும், பெரியவற்றிற் பெரியதாகவும், கணுக்கள் முதிர்ச்சி பெற்ற கரும்பின் உள்ளே சுவையாகவும், பரம் பொருள் இருத்தலை எனக்குக் காண்பித்து, சிவவேடமும் திரு நீறும் என்பால் விளங்கும்படி நிலைபெறச் செய்து உண்மை பொருந்திய அடியவர் திருக்கூட்டத்துடன் சேரவைத்து, திரு வைந்தெழுத்தின் அரியபொருளை என்மன உணர்வில் நிலைக் கும்படி உபதேசித்து, உண்மை நிலையை எனக்கு அளித்தருளி என்னை ஆண்டு கொண்ட பேராற்றல் மிக்க விநாயகப் பெரு மானே மணம்கமழ்கின்ற நின் திருவடிகளே எனக்குப் புகலிடம்.

**விநாயகர் அகவல் உரை முற்றும்.**

---


## " ஞானசம்பந்தம் "

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பாரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டு ரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

**செயலாளர், " ஞானசம்பந்தம்" அச்சகம் "**

தருமபுரம், மாயூரம் P. O.

# ENGLISH TRANSLATION OF TAMIL LITERATURES

*Prof: V. PERUMAL*, M.A B.T. M.R.A S.
K G F. First Grade College,
Oorgaum, Kolar Gold Field
(Mysore State)

(Continued from Bage 480 of vol 27)

(12) A translation must have the same force as that of the original in each and every sense of the term. For instance, the first couplet of Thirukkural

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (Kural: 1)

has been rendered into English by Mr. M S Poornalingam Pillai in the following lines which have the same force of the original couplet:

'All letters begin with A. This world has the Supreme Being as its first'.

The same force is also found in the English translation of Thirukkural rendered by Mr. V. R Ramachandra Dikshitar.

"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்" (Kural: 156)

Following is his translation of the above couplet:

'The delight of the avenger is for a day. The joy of the forbearing lasts till the end of the earth'.

(13) Suitability of diction and fitness of expression form the mode of translation. The translation should be on a par with the original not only in theme but also in form. Mr. S. M Michael's translation of Thirukkural is a good example of such a translation,

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்" (Kural: 109)

He has rendered the above Thirukkural in the following couplet:

'The deadliest deed's straight forgot,

By a single benefit's thought'.

(14) It is fully appropriate to translate Tamil poetry into English Verse rather than prose. Dr. G. U. Pope, Mr. F. W. Ellis, Mr. J. V. Chelliah, and Mr. K. M. Balasubramaniam, deserve a special mention in this regard. In general, they have done justice to their original authors and their subjects. Pope's translation has such a poetic spirit that it appears as if it were a piece of original poetry.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (Kural: 400)

Following is the translation rendered by Dr. Pope

'Learning is excellence of wealth that none destroy;
To man nought else affords reality of joy'.

His English translation of Naladiyar, though prose in form, has a poetic flavour.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு" (Naladiyar: 131)

Following is the translation: 'Beauty of locks, beauty of circling garments' folds, beauty of saffron tint: these are not beauty true. Itegrity of soul that brings the conscience peace is learning's gift; that only is beauty true:'

Mr. F. W. Ellis has rendered Thirukkural and Naladiyar into English verse and English prose

respectively. From the point of view of quality his translations can be placed on a par with that of G. U. Pope.

> "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
> மக்கட் பேறல்ல பிற" (Kural: 61)

Following is the translation of Ellis: 'Of all the world calls good, no good exists Like that which wise and virtuous offspring give: I know no greater good'.

> "யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
> கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் — யானை
> அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
> மெய்யதா வால் குழைக்கும் நாய்" (Naladiyar: 213)

Ellis' translation of the above quatrain is as follows: 'Avoiding the friendship of those who resemble elephants, seek the friendship of those who resemble dogs; for an elephant will kill his driver, whom he hath known for a long time, but a dog will wag his tail while the spear thrown at him is still in his body'.

Mr. J.V. Chelliah's English translation of Pattupattu (Ten idylls) is an excellent English poetry by itself. The following are but a few specimens of his translation:

> "திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
> வேலினும் வெய்ய கானமவன்
> கோலினும் தண்ணிய தடமென் தோளே"
> (Pattinapalai: 299-301)

'The lonely way more dreadful seems
Than jave-lins aimed against his foes.
Herbroad and tender shoulders feel
Even sweeter than his scept'red sway'.

"பாடல் பற்றிய பயனுடை எழாஅற்
கோடியர் தலைவகொண்ட தற்ந
அறியாமையி னெறிதிரிந் தொராஅ
தாற்றெதிர்ப் படுதலும் நோற்றதென் பயனே"
(Porunavathrupadai: 56–59.)

'O Chief of bards whose songs have value great: It is the fruit of good deeds done by thee In a former birth that made thee meet me here, Nor miss the proper way in ignorance'.

"கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉ மயிர் யாக்கைக் குடாவடி உளியம்"
"பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண் நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழவோனே"
(Thirumurugathrupadai; 309–317)

'The clusters black of pepper blooms bend down
The spangled peacocks with a modest gait
Scared fly about, and so do peahens strong.
In mountain clefts boars lie concealed in lairs.
And bears too wander that have crooked feet
And black-haired bodies that resemble much
The tender black palmyrah's fibre soft.
The black-horned bisons wild set up a roar.
He is the lord of hills from whose tops leap
Great roaring torrents, and in which abound,
Rich gardens where the fruits mature'.

Mr. K. M. Balasubramaniam's translation of Thiruvachakam resembles the original in style, method and manner. The spiritual sentiments of St. Manickavasagar are echoed in the translation.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந் தருளுவது இனியே"

(Thiruvachagam: 37 Pidithapathu: 3)

Mr. Balasubramaniam has rendered the above devotional psalm in the following stanza;

'O Mother, my Father and O peerless Gem;Thou art Rare Ambrosia which is mellowed out of Love: Unto my base and wand'ring self of rotten frame, Which falsehood multiplies but shortens time for good, The best and purest bliss of Sivam Thou didst will despense: O wealth Supreme of mine and Thou My Lord Siva: In this life itself I hold Thee firmly within my grip: How canst Thou in grace henceforth give me the slip?'

Mr. V. V. S. Aiyar in his scholarly book 'Kamba Ramayana A study' has rendered some of the poems from Kamba Ramayanam into free and liberal English verse. The English renderings have poetic sprit.

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத்துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாஎன் றியம்பினன் அரசன் என்றாள்"

(Kambaramayanam: Ayodhya Kandam:3)

"She said, 'The kind commands that all the earth
By ocean girt thy brother Bharat shall rule;
And thou shalt wear the twisted knot, and tread
The forest wide with saintly steps, and bathe

In sacred waters, and in fourteen years
Return to Fair Ayodhya and live in peace

"மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்பனோ என்
பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதின் உறுதிஅப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம்இன்றேபோகின்றேன்விடையும்கொண்டேன்"

"E'en were it not my father's royal will,'
He said,'would Ram thy son transgress the word?
And Bharata's fortune, can it ever be
Less dear to me than mine? I say no more;
I take thy blest command a sacred duty;
Behold, this very day I start and take My leave!

(V.V.S. Aiyar: Kamba Ramayana A study, Bharatiya Viya Bhavan's(Bombay)publication, Page No. 9)

---

[தொடரும்]

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு, சு. இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

8-வது பாசுரம் கோயில்

திருச்சிற்றம்பலம்

கூர்வாளரக் கன்றன் வலியைக் குறைவித்துச்
சீராலேமல்கு சிற்றம்பல மேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீராநோ யெல்லாந் தீர்த றிண்ணமே.

திருச்சிற்றம்பலம்

ஏழாவது திருப்பாசுரத்திலே தலைவர் யாரென்று அறியாது மயங்கி யார்யாரையோ தலைவரென்று வீணே கொண்டாடித் திரிகின்ற உலகினருக்குச் சிவனையே வணங்கும் தலையை யுடைய சிவனடியார்களே தலைவரென்றுணர்த்தியருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் உலகினர் அநேக காலமாக நோய் வாய்ப்பட்டுத் துன்புற்றும் அதைத் தீர்த்துக்கொள்ள வழியறியாது கெடுகின்றார்களேயென இரங்கி தீர்த்துக்கொள்ளும் வழியை அருளுகின்றார் எட்டாவதாகிய இந்தத் திருப்பாசுரத்திலே, புகலிவித்தகர். உயிர்களாகிய நமக்கு மூன்றுவகையான நோய்களுண்டு ஒன்று உயிர் நோய், இரண்டு உளநோய், மூன்று உடல் நோய். இது ஒவ்வொன்றும் மும்மூன்றாக விரிந்துள்ளது. உயிர்நோய் என்பது ஆணவம், மாயை, கன்மம் என மூன்றாகவும், உள நோய் கவலை விசனம் துக்கம் என மூன்றாகவும் உடல் நோய் வாத பித்த சிலேத்துமம் என மூன்றாகவும் விரிந்துள்ளது. உயிருக்குள்ள நோய் ஊனக்கண்ணுக்கும் ஈன வறிவுக்கும் புலப்படாது. அது ஞான சாத்தி

ரங்களாலும் பெரியோர்களாலும் அறியப்படுவது. உளநோய் தனக்கும் பிறருக்கும் அறியப்படுவது. உளநோய் உடல்நோய் இவ்விரண்டுக்கும் காரணம் உயிர்நோய் எனப்படும் மல நோயேயாகும். இந்த நோய் எல்லா நோய்களுக்கும் முதல் நோயாகையால் மூல நோய் எனப்பெயர் வழங்கலாயிற்று. இந்த நோய் ஒன்று ஒழிந்துபோகுமானால் எல்லா நோய்களும் ஒழிந்துபோகும் இன்பமே எந்நாளும் துன்பமில்லாமல் வாழலாம். ஆனால் இந்தநோய் சிவபெருமான் ஒருவரைத் தவிர மற்றப் பிரம்மேந்திராதி தேவர்களாலும் தீர்க்க முடியாது. இக்கருத்தை அப்பர் சுவாமிகள் (மூல நோய் தீர்க்கும் முதல்வன்கண்டாய், என்பதாலும்,

திருச்சிற்றம்பலம்

"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராதசெல்வம் வருவிப்பானை மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி [கொண்ட
தீராநோய் தீர்த்தருளவல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக்
போரானைப் புள்ளிருக்கு வேளூரானை போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

என்பதால் தெளிய வைக்கிறார். ஆகவே மூல மல நோயைத் தீர்ப்பதற்கு மருந்துகளும் முறைகளும் சிவாகமமென்னும் நூலிலே சிவபெருமான் எழுதிவைத்துள்ளார். உலகில்உள்ள வைத்தியர்கள் உடல் நோயைத் தீர்ப்பதற்கு மணி மந்திரம் மருந்து என்ற மூன்றையும் உபயோகித்துத் தீர்ப்பார்கள். சிவபெருமானும் உருத்திராக்கம் என்னும் மணியாலும் திருவைந்தெழுத்தென்னும் மந்திரத்தாலும் திருநீறு என்ற மருந்தாலும் நம்முடைய உயிர்நோய் என்னும் மூலநோயைத் தீர்த்தருளுகிறார். இதனால் அவருக்கு வைத்தியநாதர் என்னுந் திருநாமம் விளங்குகிறது. பவரோக வைத்தியநாதப் பெருமாளே என்பார் அருணகிரிநாத சுவாமிகள். உருத்திராக்கம், திருவைந்தெழுத்து, திருநீறு இந்த மூன்றையும் சிவாகம முதலிய சைவ நூல்களிலே சொல்லிய வண்ணம் அணிந்தும் ஓதியும் பூசியும் சிவபெருமானை ஏத்துபவர்களுக்கு மூலநோய் ஒழிந்துவிடும் என்பதிலே சிறிதுஞ்சந்தேகமில்லை. இந்த நெறியில் வாராதவர்களுக்கு மூலநோய் தீராது என்பது திண்ணம்.

உருத்திராக்கம் என்பது சிவபெருமானுடைய திருக்கண்ணிலிருந்து முதலில் தோன்றியது அதனாலே அது உருத்திராக்

கம் எனப்பெயர் விளங்குகிறது. உருத்திராக்கம் அணிந்து கொள்ளாமல் சிவபெருமானை பூசை செய்பவர்கள் பூசையின் பலனும் பெறுமல் சிவபெருமானுக்கு பிரியமில்லாதவர்களாய் அவர் பார்க்க வெறுத்துக் கூசுவார். இதனுலே அவர்கள் சைவர்களென்றும் பத்தர்களென்றும் சொல்லுவதும் பொய்யேயாம். இதற்குப் பிரமாணம் சைவசமய நெறியிலே,

பூணுமற் கண்டிகை பூசை புரிவார் பலத்தைக்
காணுர் பூணுய் கண்டிகை
பூண்பதற்கு கண்டியினைக் கூசியிடும் புல்லியரை
காண்பதற்கு கூசுமரன் கைத்து.

என்பதால் விளங்கும். நாயகனுள்ள பெண் மாங்கல்யம்அணிந் திருப்பது போல சிவபெருமானை நாயகராக உடைய பத்தர் கள் உருத்திராக்கம் அணிவது மிக அவசியம். உருத்திராக்க மணியாதவர்கள் மாங்கல்யமில்லாதவர்கள் போலும் என உணரப்படும் ஆகவே உருத்திராக்கம் சிவபெருமானுக்கு அடி மையென்பதை நினைவூட்டி நன்மையைச் செய்யும். திருவைந் தெழுத்தென்பது சிவபெருமானுடைய திருவுருவமேயாம் இதற்குப்பிரமாணம் உண்மைவிளக்கமென்னும்ஞான நூலிலே

ஆடும்படிகே ணம்பலத்தானை யனே
நாடுந்திருவடியிலே நகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும் முகம் வாமுடியப்பார்.

என்பதனுல் விளங்கும் விளங்கவே திருவைந்தெழுத்தை சிவா கம முறைப்படி சிவதீட்சைபெற்று ஓதாதவர்கள் அறிவிலார் எனப் பெரியவர்களால் இகழப்படுவார்கள் இதற்குப் பிரமா ணம், திருத்தொண்டர் புராணத்திலே சேக்கிழார்சுவாமிகள்,

பஞ்சின் மெல்லடிப் பாவையருள்ளமும்
வஞ்சமாக்கள் தம் வல்வினையு மரன்
அஞ்செழுத்துமுணரா அறிவிலோர்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்.

என்பதால் தெளியலாம் வேத நான்கினுமெய்ப் பொருளாவது நாதனும நமச்சிவாயவே என்னும் திருவாக்குகளால் தெளிய லாம். இதுவே ராஜமந்திரமென்று இம்மந்திரத்தை புணையா

கப் பற்றுதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

இனி திருநீறு சிவவெருமானுடைய திருமேனியில் உண்டாகியது விபூதியை அணியாதவர்கள் எத்தனை விதமான தருமங்கள்செய்தாலும் அதனுல் பயன்பெறமாட்டார்கள். விபூதி அணிந்தவர்கள் தருமஞ் செய்யாவிடினும் எல்லாத் தருமமுஞ் செய்த பயனைப் பெறுவார்கள் இதற்குப் பிரமாணம் திருத்தணிகைப் புராணத்திலே,

தயங்கிய நீறுடற்றரித்திலா ரெனில்
இயங்கற மெத்துணை யியற்றி முற்றினும்
பயங்கதுவுதலிலை பலவு முற்றிய
வியங்கலில் பயிர்க் குறுகாவலின் றென.

உரைத்தனவற முருற்ருர் களாயினும்
வரைத்தவவ் வறப்பயன் வருதல் காண்பராற்
தரைத்தலை நெறிமுறை தழங்க நாட்டுவோய்
புரைத்தப விதியினும் பூதி பூசுவோர்.

என்பதனுல் தெளிந்துகொள்ளலாம். மலநோய் நீங்கவேண்டுமென்று நினைப்பவர்கள். இம்மூன்றையும் நூலிலே சொன்னபடிபெற்று சிவபெருமானை ஏத்ததேண்டும் அப்பர்சுவாமிகள்,

நூலால் நன்ரு நினைமின்க ணேய்கெட
பாலானைந்துட னுடும் பரமனுர்
காலா லூன்றுகந்தான் கடம்பந் துறை
மேலா னுஞ் செய்த வல்வினை வீடுமே.

என்று அருளுகிருர். மல நோயைத் தீர்த்துக் கொள்ளும் அறிவுடையோர்களே சிறந்தவர்களாவார்கள் அல்லாதவர்கள் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற அறிவிலிகளாவார்கள். அவர்கள் சிவபெருமான் திருவடியை அடைய முடியாது. பதினோராந் திருமுறையிலே பட்டினத்துச் சுவாமிகள்,

திருச்சிற்றம்பலம்

காணீர் கதியொன்றும் கல்லீர் எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன் புகழாசைப் பட்டு
பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுஇலீர்
வீணீர் எளிதோ மருதப் பிரான் கழல்மேவுதற்கே.

என்னும் பாடல் அழகுற விளக்குகிறது. சிவபெருமானை ஏத்துதலே மிக அவசியமாம். அவரை ஏத்துமிடங்கள் மூன்ருகும். ஒன்று சிவலிங்கம் இரண்டு சிவகுரு மூன்று சிவனடியார். இந்த மூன்றிடங்களாகும் பரம ஞானிகளும் இந்த மூன்றிடங்களிலும் வழிபட வேண்டுமென்னில் அவர்களுக்கு மறுதலையாக விளங்குகின்ற நாம் வழிபடாவிடில் சிவனருள் சிறிதும் பெறமாட்டோம் என்பது திண்ணம் சிவஞான போதம் 12–ம் சூத்திரத்தில்,

செம்மலர் நோன்ருள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே.

என்று அருளிச்செய்துள்ளார் மெய்கண்டதேவர். சிவலிங்க வழிபாடு ஆணவமலத்தையும் சிவகுரு வழிபாடு மாயா மலத்தையும் சிவனடியார் வழிபாடு கன்ம மலத்தையும் போக்கும். மேலும் திருவைந்தெழுத்து ஆணவத்தையும் உருத்திராக்கம் மாயா மலத்தையும் திருநீறு கன்மமலத்தையும் நீக்கும். இவைகள் ஞான நூல்களாலும் பெரியோர்களாலும் அறியப்படும், ஒரு திருப்பாட்டு

ஏத்தறிய லிங்ககுரு சங்கமந்தான், ஏகபரன் மனம் வாக்கு காயமாகும்
வாய்த்த மனம் சிவலிங்கமாகும் மூல மலமகற்றும், குருவருள்சேர் வாக்கு மாயை
தீர்த்தருளுஞ் சங்கமமா மேனி தன்னல் தீராத இருவினையாங் கன்ம நீங்கும்
ஆர்த்தமலம் மூன்றகற்றும் குறியீதாகும் அல்லது மற்ருென்ருலு மகன்றிடாதே.

என்னுந் திருப்பாடல் நன்ருக விளக்குகிறது இந்த மூன்றிடங்களையும் வழிபடாது நிந்தித்து முத்தியடைய விரும்புவோர் அரண்மனையிலே புகுந்து திருடிய திருடர்களை காவலர்கள் பிடித்துவந்து அரசன்முன்விட அவர்கள் அரசனிடம்பொருள் கேட்டால் எப்படிப் பெறமுடியாது தண்டனையைப் பெறுவார்களோ அதுபோல மூன்றிடங்களிலும் வழிபடாதவர்களும் முத்தியடைய முடியாது அவர்கள் அறிவு கீழானது என்று அருளுகிருர் பட்டினத்துச் சுவாமிகள்,

சொக்கிட்டரமனை புக்குட்டி ருடியதுட்டர் வந்து
திக்குற்ற மன்னரைப் பொருள் கேட்பது போற் சிவநிந்தை செய்து

மிக்குக் குருலிங்க சங்கம நிந்தித்து வீடிச்சிக்கும்
மெக்குப் பெருத்தவர்க் கென் சொல்லுகேன் கச்சியேகம்பனே.

என்றருளுகிருர். இந்த மூவிடங்களிலும் வழிபாடு செய்தால் தான் சிவவழிபாடு முழுமையாகும்.

குருபத்தி சிவனடியார் பத்தி இல்லாதவர்கள் கோயிலைச் சுற்றித் தினந்தோறும் புரண்டாலும் சிவனருள் பெறமாட்டார்கள் என்பது சத்தியம். சிவபெருமானை ஏத்துதல் என்பது சிவன் விளங்கித் தோன்றுமிடங்களில் வழிபாடுபுரிவதாம். மேலே சொன்ன மூன்றிடங்களிலும் தயிரிலே நெய்போல் விளங்குவார். மற்றெல்லாவிடங்களிலும் பாலில் நெய்போல தோன்றுது நிற்பார். அருள்சுரக்குமிடங்களாகிய மூவிடங்களிலும் வழிபட்டுய்வதே அறிவுடைச் செயலாகும். ஏத்துதலும் நாள்வீண் போகாது தினமும் ஏத்தவேண்டும் என்பார். நீரார்சடையானை நித்தலேத்துவார் என்று விளக்குகிருர். காழி வள்ளல். உடம்பிலுள்ள அழுக்குகள் போகவேண்டுமானுல் நீரால் கழுவிப் போக்கிக்கொள்ளலாம். உயிரழுக்காகிய மல நோயைக்கழுவ சிவபெருமானுல்தான்முடியும்என்பதுவிளங்க மற்றையோருல் முடியாதென்பதும் விளங்க நீரார்சடையான் என்றருளினுர். தீர்த்தன் என்றும் சிவபெருமானுக்குதிருநாமமுண்டு. திருவெம்பாவையிலே காணலாம். உலகத்திலே வாழ்பவர்கள் தவறுசெய்தாலும் அவர்கள் தவறை உணர்ந்து சிவபெருமானைச் சரணமடைந்தால் அவர்களையும் சிவபெருமான் வாழவைப்பார் என்பது விளங்க கூர்வாளரக்கன்றன் வலியைக் குறைவித்து என்றருளினுர் சம்பந்த சுவாமிகள். எல்லாத் திருப்பதிகங்களிலும் எட்டாவது திருப்பாசுரத்தில், இராவணன் வரலாற்றை நினைவுசெய்வார். சேக்கிழார்சுவாமிகள் இதற்கு வியாக்கியானம் செய்கிருர்.

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் திருக்கருணை கைக்கொள்ளுமெனக் காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற்கருள் புரிந்த ஆக்கப்பாடருள் செய்வார்.

என்னுந் திருப்பாட்டால் விளங்கும். சிவபெருமானை ஏத்துபவர்கள் தவறுகள் செய்யக்கூடாது. செய்தால் எல்லாமறி

யுஞ் சிவபெருமானுல் தண்டிக்கப்படுவார்கள் இராவணன் வாலி சூரன் முதலானவர்கள் சிவபூசை செய்தவர்கள் தண்டனைக்குட்பட்டார்கள் ஏனெனில் செய்யத்தகாதகாரியங்களை செய்ததனுல் தண்டிக்கப்பட்டார்கள். குமரகுருபர முனிவர் அருளுகிருர், தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின் அத் தெய்வமே முன்னின்று கண்ணெறுக்கு'ம் என்று பேசுகிருர். சிவபெருமான் நீதியே வடிவமாக விளங்குபவர் அவரை வழிபடும் பத்தர்கள் நீதி தவறினுல் உடனே தண்டித்துத் திருத்துவார். சிலபக்தர்கள் பெரிதும் துன்பமடைகிருர்கள் அவர்கள் செய்யத்தகாத பேசத்தகாத நினைக்கத்தகாத செய்கைகள் உள்ளவராகயிருக்கலாம். நல்லபண்பாடு பழக்கம் இவைகளில்லாமல் பூசை பக்தி இவற்ருல் பலன்பெற முடியாது. வேடநெறி நில்லார் வேடம் பூண்டென்பயன் என்பார் திருமூலர். சைவநெறியில் நிற்பவர்கள் தாழ்ந்த எண்ணத்துடனும், அடியார்களைப் பணியக் கிடைத்ததே என்ற செருக்கும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். காரைக்காலம்மையார் அருளுகிருர்,

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் துணிந்தென்றும்
எந்தையார்க் காட் செய்யப்பெற்ற இது கொலோ
சிந்தை யார்க்குள்ள செருக்கு.

என்னும் பாடலைச் சிந்தித்து சீராலே மல்கும் சிற்றம்பலப் பெருமானை நீராலும் பூவாலும் தினமும் போற்றி தீராநோயாகிய மல நோயை தீர்த்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக. திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

[தொடரும்]

516.

# "இதயம் பேசுகிறது"

திரு. புலவர்: தெ. முருகசாமி பி. ஓ. எல். அவர்கள்,
இராமசாமி தமிழ்க்கல்லூரி, (விரிவுரையாளர்)
காரைக்குடி—1

---

மனித இனம் கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கிய போது ஒரு சமூக அமைப்பு ஏற்பட்டது. கூட்டமாக வாழ்ந்த அச்சமூக அமைப்பில் ஏற்பட்ட நெரிசலும் நெகிழ்ச்சியும் காரணமாக நீதி, சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு, விதி என்ற பல பொருள் குறித்த ஒரு நியதி உருவானது, இந்நியதி சமூகத்திலிருந்து உருவானது தான் என்றாலும் சமூகத்தின் ஒருவகையான வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய தயாகிவிட்டது. சுருக்கமாகச் சொன்னால் தெய்வத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒத்த மதிப்பு இந்நியதிக்கும் கொடுக்கப்பட்டது எனலாம்.

சட்டம் அல்லது ஆணை என்பது சமூக அமைப்பில் தோன்றி சமூகத்தைக் கட்டிக் காக்கும் புறவடிவமாகும்,இது பல்வேறு விரிவுடையதாய் அகன்று பரந்து, இப்புற வடிவிற்கோர் அகவடிவம் உண்டு. அதுதான் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள நெஞ்சம் அல்லது மனம், அம்மனந்தான் விரிந்து அகலாத ஆழமுடையது.

புறவடிவமாகிய சட்டத்திற்கு ஒவ்வொருவரும் கொடுக்கக் கூடிய மதிப்பும் மரியாதையும் கொடுத்தே ஆக வேண்டும் என்பது கடமை. அக்கடமையினின்றும் ஒருவன் நழுவலாம். மதிப்பு கொடுக்காமலேயே கொடுத்தது போல் உலக தோற்றத்தில் தன்னைக் காட்டிக்கொள்ளலாம். அதாவது சட்டத்தின் பிடியிலிருந்து ஒருவன்தன்னை எந்தவிதத்திலேயும்காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் அகவடிவமாகிய நெஞ்சத்தின்பிடியிலிருந்து அவனால் தப்பிக்க முடியாது, அது அவனை நன்கு

அடையாளம் கண்டு கொண்டு அவனை அலைக்கழித்து அலகை யாக்கிவிடும் என்பதில் ஐயமில்லை. இதனையே வள்ளுவர்,

> ''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும்''

என்கிறார். எனவே புறவடிவமாகிய சட்டத்தினின்றும் தப்பித்துக் கொள்ளும் மனிதனின் ஒவ்வொரு செயலும் அகவடிவத்தின் அதட்டலுக்கு ஆளாகி அலைதளிக்கும் தண்டனைத் சுழும்புகளைப் பெற்றே தீர வேண்டும் என்பது விதியாகும். ஆக, ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையிலிருந்து அல்லது சுய கட்டுப்பாட்டிலிருந்து விலகுவதென்பது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் ஏளன பிழைப்பாகி விடுகின்றது.

''உனக்கு நீயே பொய்யாக நடந்து கொள்வதைவிட, உலகத்திற்குப் பொய்யாக நடந்து கொள்வது எத்தனையோ மடங்கு மேல்'' என்கிறார் காந்தியடிகள். இதனால் உள்ளம் வேறு புறச்செயல் வேறு என்பது பொருளன்று உள்ளம்நேரிதாயின் புறச் செயல்களும் நேரிதாகும் என்பதே தக்க பொருளாகும்.

> ''உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண் டாகும்''

என்ற பாரதியின் வரிகள் அகத்திற்கும் புறத்திற்கும் ஒருநல்ல தொடர்பைக் காட்டுகின்றன இவ்வாறின்றி வாழ்வது வாழ்வாகாது, எனவே புறவடிவமான நீதி அல்லது விதியினின்றும் தப்பித்துக் கொண்டதாகக் கருதி ஒருவன் கணக்கிட்டுப்பார்க்கும் ஒவ்வொரு கோடும் நெஞ்சத்தின் கீறலாக மாறிவிடுகின்றது என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொருவர்க்கும் இதயம் உண்டு என்று உலகம் நம்புகிறது. ஆனால் இதயம் படைத்தவர்களெல்லாம் மனிதர்களாவதில்லை என்று நம்பும்படியும் செய்கின்றது. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவுகலவாமைவேண்டும்' என்ற வள்ளலாரின் வேண்டுதலும்,

> ‡'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி
> வஞ்சனை சொல்வாரடீ – கிளியே
> வாய்ச் சொல்லில் வீரரடி''

என்ற பாரதியின் பதட்டமும் இதயம் படைத்தவர்களையெல் லாம் மனிதர்களாகக் காட்டவில்லை. ஏன்? உயிர்த்துடிப்பை இழந்த இதயம் அவர்களின் உறுப்புக் குறையை மட்டும் போக்குவதால் இதயம் படைத்தவர் மனிதராவதில்லை உயிர்த் துடிப்புள்ள இதய உணர்ச்சி உடையவனே மனிதனாகிறான். இதனையே வள்ளுவர் ''மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி'' என்கிறார்.

'நெஞ்சில் கைவைத்துச் சொல்' என்ற உலக வழக்கும், 'நெஞ்சாரப் பொய்தன்னை சொல்ல வேண்டா' என்றஔவை யாரின் முதுமொழியும் இதயத்தொடுபட்ட இனிய மாந்தனை அடையாளம் காட்டுகின்றன.

நாயகன் சேவடி தைவரும் சிந்தையைப் பெற்ற சமய அருளாளர்கள் உள்ளத்தால் பொய்யாத உண்மையை நம்பி வாழ்ந்தார்கள். 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் என்று தம் நெஞ்சைத் திறந்து காட்டினார் அப்பரடிகள். 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே' என்ற புறப் பாட்டின் திறமும் ஆன்மீக அடித்தளத்தில் கிளைத்த அக வுணர்ச்சியின் ஆணிவேர் என்பதில் அட்டியில்லையன்றோ! எனவே,

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்''

என்கிறது வள்ளுவர்,

ஒவ்வொருவர் நெஞ்சத்தின் ஒலியும் தத்தம் செவிகளுக் குக் கேட்கப்பட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர், தம் நெஞ்சக் குரலுக்குத் தம் செவிகளே அளவு கருவியாக வேண் டும் என்பது அவரின் உட்கிடை போலும்!

''தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்'!

என்ற வள்ளுவரின் திருக்குறள் ஒவ்வொருவரின் இதயசுத்தி யான ஒலியைத் தட்டியெழுப்புகின்றது. அதாவது உலகம் நம்மைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் நம்மை நாமே யார்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அலங்கார நாயகன் 24

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

## மரணம் இல்லாப் பெரு வாழ்வு

மரணம் என்பது ஒரு பெரிய அபாயம், அது தடுக்க முடியாத ஒன்றாகும். எத்துணைச் செல்வம் பெற்றவன் ஆனாலும், எத்துணை சிறந்த வீரர் ஆனாலும், வெண் கொற்றக்குடையின் நிழலில் இருந்து பேராற்றலுடன் தனிச் செங்கோல் தாங்கி உலகெலாம் அரசு புரியும் வேந்தர் ஆயினும் மரணத்தைத் தடுக்க இயலாது. ஞானம் பெற்றவர்கள் இந்த உலக வாழ்வு நிலையற்றது. என்பதை உணர்கிறார்கள். இறைவன் அழிவில்லாத பொருள் என்பதையும் அறிகிறார்கள். ஞானிகள் நமக்கு மரணம் நிச்சயம் என்பதைத் தெரிந்து கொண்டு நமக்குத்

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிந்து கொள்ள வேண்டுமாம். இதனால் தான் மாணிக்கவாசகர் தன்னைத் தானே யார் என்றுணர தன் இதயத்தொடு பேசினார். அதுவும் தும்பி ஒன்றிடம் பேசுவது போல தன்னொடு தானே பேசுகிறார், திருவாசகத்தின் திருக்கோத்தும்பி என்ற பகுதியில் அவர், "நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார் என்று தன் இதய நாடியின் இன்ப ஒலியை நெருடுகிறார்.

எனவே உள்ளத்தால் பொய்யாத உலகியலும் அருளியலும் இதயத்தொடு பேசத்தூண்டுகின்றன. இங்ஙனம்பேசப் பழகுவது மனித இனம் பேசப் பழக்குவதும் மனித இனமே ஆக, இதயத்தொடு நாம் பேச வேண்டும். அல்லது இதயம் நம்மோடு பேச வேண்டும். அப்போதுதான் இதயம் உயிர்த் துடிப்புடையதாய் மனிதனை மனிதனாக்குகிறது. இதனால் மனிதர்கள் யாவரும் நெஞ்சத்து அவலமிலராகிய பிரபஞ்ச மனிதர்களாவர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

துணையாக இருப்பது இறைவன் திருவருள் என்று உறுதியாக உணர்ந்து அதனை அடைய முயற்சி செய்கிறார்கள்.

உடம்பினின்றும் உயிர் பிரியும் போது அளவற்ற துன் பத்தை உயிர் அடைகின்றது. பயங்களில் எல்லாம் மிகவும் பெரியது மரணப் பயமேயாகும். "யானேதும் பிறப்பஞ்சேன், இறப்பதனுக் கென் கடவேன்" என்று மணிவாசகம் கூறுகின் றது. அப்படி உள்ள மரணம் நமக்கு இல்லை என்று அருண கிரியார் சொல்கிறார்.

"மரணப் பிரமாதம் நமக்கு இல்லையாம்" அப்பர் சுவாமிகள் மிகவும் பணிவு உடையவர் "குலம் பொல்லேன், குணம்பொல் லேன், குறியும் பொல்லேன்" என்று தம்மைச் சொல்லிக் கொள்கிறார். ஆனால் இறைவன் திருவருட் பேற்றைப் பெற்ற பெருமிதத்தில் "நாமார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்" என்று மிடுக்கோடு பாடுகிறார். எல்லோரும் ஐயோ என்று அலரும் இடத்தில் அவர் நாம் என்று தலைநிமிர்ந்து பேசுகிறார். அதுபோலவே அருணகிரிநாதர் மரணம் எனக்கு இல்லைஎன்று சொல்ல வேண்டியவர் மரணம் என்ற தவறு நமக்குக் கிடை யாது என்று பேசுகிறார். அது அவருடைய பெருமிதத்தைக் காட்டுகிறது.

மரணம் இல்லாப் பெருவாழ்வு இன்னது என்று முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மரணத்துக்கு அஞ்சுவது ஏன்? பல காலம் இவ்வுடலில் இருந்த உயிர் போவதனால் ஏற் படும் பிரிவுத் துன்பமே அதற்குக் காரணம், இந்த உடம்பு நமக்குச் சொந்தம் என்ற நம்பிக்கையோடு இதனிடம் அதிகப் பற்றுக் கொண்டமையால் அஞ்சுகிறோம். உடம்பைப் பற்றி மாத்திரம் அல்ல. உடம்போடு சம்பந்தப்பட்ட மக்கள், உடம் போடு சம்பந்தப்பட்ட உடைமைகள், உடம்போடு சம்பந்தப் பட்ட வாழ்க்கை, ஆகியஎல்லாவற்றையும்பிரிகிறோமே என்று எண்ணி, மனம் துன்புறுகிறது இனிப் போகிற இடம்எப்படி இருக்குமோ எனக் கவலை உண்டாகிறது.

இந்தப் பிறவியில் இந்திரிய சுகம் என்ற அநுபவம் நமக் குத் தெரிகிறது. வேறுவகையான அநுபவம் நமக்கு இல்லை.

மரணம் வந்தால் நமக்கு அது விடுதலை ஆகாது. நமக்கு இறை மாற்றம்தான். ஆனால் ஞானிகள் அடையும் மரணமோ விடுதலை. வீடாகிய மோட்சத்திற்கு விமானத்தில் ஏற்றி அழைத்துச் செல்கிறார்கள், எனவே எல்லாப் பற்றுக்களையும் துறந்த அவர்கள் மரணத்தினால் வருந்துவதில்லை,

இறைவனை நம்பியவர்களுக்கு மரணம் வராது. "என்றும் வாய்த்த துணை. கிரணக் கலாபியும் வேலும் உண்டே" எனக்கு இந்த உலகில் வாழும் போதும் இந்த உலகைவிட்டு மரணம் அடைகின்ற போதும், சென்று சேர வேண்டிய இடத்திலும் வேலும் மயிலும் துணை நிற்கின்றன. எல்லாக் காலத்திலும் எனக்கு என்று அமைந்த துணை. அவை, ஆகவே எனக்கு மரணமாகிய தவறு இல்லை என்கிறார். வேலும், மயிலும்துணை என்றே சொல்லிக் கொண்டு வாழ்க்கையை நேர்வழியில் செலுத்திக் கொண்டிருப்பவர் அருணகிரியார். மயில் செல்லத் தகாத வழியில் செல்லாதே என்று நினைவுறுத்துகிறதுவேலோ இறைவன் திருவடியில் ஈடுபட வேண்டும் என்று நினைவுறுத்துகிறது.

"கிண்கிணி முகுள, சரணப் பிரதாபா, சசிதேவி
மாங்கல்யம் தந்து ரஷாபரண, கிருபாகர,
ஞானகர, சுர மாஸ்கரனே"

முருகவேள் என்று மகலாத இளம் பூரணன் ஆதலால் அவருடைய திருவடியில் கிண்கிணி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

"இனியநாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்" —திருப்புகழ்.

எல்லாவிதமான துன்பத்தையும் போக்கும் இடமாக இருப்பது ஆண்டவன் திருவடி, இறைவனடி சேராதார் பிறவிப் பெருங் கடல் நீந்தார் என வள்ளுவர் சொல்கிறார். துன்ப நீக்கத்திற்கு இருப்பிடமாக, சகல ஆன்மாக்களும் சரணம் புகுந்து உய்வு பெற நிற்பது இறைவன் சரணங்கள் அந்த திருவடியை அழகாகப் பாடுகிறார்.

"கிண்கிணி முகுள சரண"

"குமரா சரணம் சரணம் என்றண்டர் குழாம் துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள்"

முருகப் பெருமான் உலகம் எல்லாம் புகழ்கின்ற பிரதாபம் உடையவன். அவனுடைய பெரிய வீரத்திற்கு அடையாளம் இந்திராணியின் கழுத்தில் உள்ள மங்கல நாண், இதனை ரட்சிக்க முருகன் அமர்க்களம் சென்று தாராகாசுரன், சிங்கமுகாசுரன், பானுகோபன் கிரௌஞ்சம், சூரன் முதலியவர்களை அழித்து மங்கல நாணை நிலைக்கச் செய்தான்.

"இந்திராணி மாங்கல்ய தந்து ரக்ஷாபரண
இகல் வேல் விநோதன்" — மயில்விருத்தம்.

முருகன் வீரப்புகழ் மாத்திரமல்ல ஈகைப் புகழும்உடையவன். கிருபாகரன், அதுமாத்திரம் அல்ல. மரணம் இல்லையாகவேண்டுமானால் அறியாமை போக வேண்டும், ஞானம் பெற வேண்டும், அவன் அருளால் ஞானம் உண்டாகிறது. ஞானமே முருகப் பெருமானது வடிவம், ஞானத்திற்குப் பிறப்பிடமும் அவரே உறைவிடமும் அவரே, "ஞானந்தா னுருவாகிய நாயகன்" என்ற முதல்வன் புராண வசனத்தாலும், "ஞானபிரமதாப வடிவமும்" "ஞான பண்டித சுவாமி" என்ற தமிழ் வேதத் திருவாக்குகளாலும் அறியலாம். அறியாமையால் உழன்று மரணத்தை அடைகின்ற உயிர்களுக்கு அருள் கொடுத்து, ஞானத்தையும் கொடுத்து, மரணமில்லாப் பேரின்ப வாழ்வைப் பெறும்படி செய்கிறான். அவன் தேவர்களுடைய இருளைப் போக்கும் ஞாயிறாக இருக்கிறான். அருணகிரிநாதர் எம்பெருமான் முருகனுடைய கிருபைக்கு அகரமாகஇருப்பவனுடைய, ஞானகரனுடைய சுரபாஸ்கரன் உடைய கிண்கிணி முகள சரணத்தைப்பற்றி, அவன் திருக்கரத்தில் உள்ள வேலையும், மயிலையும் துணையாகக் கொண்டு வாழ்ந்த வகையால் மரணப் பிரமாதம் நமக்கு இல்லையாம் என்றுசொல்லும் வீறு பெற்றார்.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர்
அதனால் உடம்பு
நினைந்து நினைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுடைய நாயகனே என்று

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]



# வேண்டுதல் வேண்டாமை

திரு. இரா. கோபாலகிருட்டிணன், அவர்கள்
ஆராய்ச்சி மாணவன், தத்துவத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 600005.

பிறக்கும்போது ஒன்றும் கொண்டுவராத நாம், பிறந்து மண்மேல் இறக்கும்போது ஒன்றும் கொண்டுசெல்லாத நாம், இடைப்பட்ட வாழ்வில் விருப்பு, வெறுப்புக்களுக்கு ஆளாகி உலகப் பொருட்களிடம் ஆசை பூண்டும் 'இது வேண்டும்; அது வேண்டாம்' என்று வேற்றுமைப்படுத்தி, ஆணவத்தினுல் துன்பச் சுழலில் உழல்கின்றோம். மக்களைக் கூடச் சமமானவர்கள் அனைவரும் என்பதை மறந்து வேண்டப்பட்டவர்கள், வேண்டப்படாதவர்கள் என்று பிரித்து முன்னவரிடம் ஒற்றுமையும், பின்னவரிடம் வேற்றுமையும் பாராட்டுகிரேம். இக்குணமானது மனிதனிடம் இயற்கையிலேயே தோன்றியதா? அல்லது இடையில் ஏற்பட்டதா? இதைமாற்ற இயலுமா?இயலுமாயின் எங்ஙனம்? என்பதைப்பற்றி அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வணைந்து வணைந்து ஏத்துதும் யாம் வம்மின்
உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்
கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்
சொல்கின்றேன்,
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே''

என்றுஇராமலிங்கஅடிகளும்இக்கருத்தையேவலியுறுத்துகிருர்

''மரணப்பிர மாதம் நமக்கில்லை
யாம் என்றும் வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலும் உண்
டேகிண்கிணி முகுள
சரணப்பிர தாப சசிதேவி
மாங்கல்ய தந்து ரட்சா
பரண கிருபாகர ஞான
கரா சுர பாஸ்கரனே''

(தொடரும்)

ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையிலேயே மூன்று வகைக் குணங்கள் உண்டு. மிருகத்தன்மை, மானிடத்தன்மை, இறைத்தன்மை இவற்றில் எது மிகுந்துள்ளதோ, அதைப் பொறுத்துத்தான் ஒருவனின் எண்ணங்களும் செயல்களும் அமையும். ஆயினும் மானிடப் பிறப்பின் பயன், மனிதன் மிருகத் தன்மையினின்றும் வேறுபட்டு, மானிடத் தன்மையிலிருந்து உயர்ந்து இறைத் தன்மையை அடைதலேயாகும். உலகில் உள்ள பல்வேறு நீதி நூல்களும், தத்துவ விளக்கங்களும், அறிவிற் சிறந்த ஆசான்களின் அறிவுரைகளும் இக்கருத்தையே வலியுறுத்துவனவாகும். தமிழ் மொழியில் ஒரே சொற்றொடர் கொண்ட ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் இவற்றிலும், இரண்டு வரிகள் கொண்ட திருக்குறளிலும், நான்கு அடிகள் கொண்ட நாலடியார் போன்ற நூல்களிலும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, புராணங்கள், தொடர் நிலைச் செய்யுட்கள் ஆகியவற்றிலும் மனிதன் சில பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும். சிலவற்றினின்றும் நீங்க வேண்டும். என்று விரிவுபடக் கூறுகின்றன.

(உதாரணம்: ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்)

உயர்நிலையை அடைய விழையும் மனிதன் எட்டாத பேரின்பத்தை அடையமுடியும். அதற்கு அவன் உலகப் பொருட்களில் பற்றற்ற நிலைபெற்றிருக்க வேண்டும். பிறவிப் பெருங்கடலாகிய துன்பத்தைவிட்டு நீங்க வள்ளுவர் காட்டிய வழியைப் பின்பற்றி ஒழுக வேண்டும். வேண்டுதல் வேண்டாமையினால் துன்புறும் மக்கள் வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனின் பொற்றுளினைச் சரண் அடைந்தால் எந்நாளும் துன்பமின்றி வாழலாம். 'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல்' என்ற இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை பகர்கிறார். "தன்னைப் பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப்பற்றி வருவனயென மூவகையான் வருந்துன்பங்கள். இறைவன் அடி சேர்ந்தார்க்கு அவ்விரண்டும் (வேண்டுதல், வேண்டாமையும்) இன்மையின் அவை காரணமாக வரும்

மூவகைத் துன்பங்களும் இலவாயின'. இக்குறளின் கருத்தைத் தழுவி இறவாப் பாடல் இயற்றிய அப்பர் பெருமான் திருவாவடுதுறை திருத்தாண்டகத்தில் ''வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை என்று வாழ்த்துகின்றார்.

எவ்வகையினால் இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்பதை விளங்கவைக்கமுடியும்? தற்காலத்தில் ஒரே வேலைக்கு ஒரே தகுதியுள்ள பலர் போட்டியிட்டாலும் வேண்டியவர் வேண்டாதவர் என்றஅடிப்படையிலும் வேலை தரப்படுவதைக் கண்கூடாகக் காணலாம். ஆனால் இறைவனின் கூடத்தில் இடம்பெற அன்பு செலுத்துவோர் யாராயினும் இறைவனின் இருப்பிடத்தில் எளிதில் இடம் பெறலாம். இங்குச் சாதி, மதம், இனம். வயது, ஏற்றத்தாழ்வு,வேண்டியவர், வேண்டாதவர் என்ற வேறுபாடுகளே கிடையாது. மேலும் இறைவனுக்குப் புலையர், நுலையர், மேலோர்,கீழோர் போன்ற பாகுபாடே கிடையாது. அனைவரையும் சமமாகக் கருதி ஆள்வதால் அவனை ஆண்டவன் என்று அழைக்கின்றோம், மானிடர் அன்றி குருவி, நாரை, சிலந்தி, எறும்பு, யானை, குரங்கு முதலிய பிராணிகளும் அவனைப்பூசித்து முக்தி அடைந்ததாகப் புராணங்கள் பகர்கின்றன. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற ஒரே குறிக்கோள்கொண்டு பலன் எதிர் நோக்காது பக்தி செய்பவர் உள்ளத்தில் தித்திக்கும் தேனாக இருப்பவன் இறைவன். பக்தியிருக்குமிடத்தில் தொண்டுதானே சிறந்து விளங்கும். 'தொண்டர் அன்பெனும் தூயநீர் ஆடுதல் வேண்டி' இறைவனே மானிடவடிவில் வந்ததாக வரலாறு கூறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாழ்கொளிபுத்தூர் இறைவனை','தடங்கையால் மலர்தூய்த்தொழுவாரைத் தன்னடிக்கே செல்லுமாறு வல்லானை' ......என்று ஏத்துகின்றார்.

ஆண்டவனே வேண்டுதல் வேண்டாமையில்லாதவன் என்று பேசப்படும்போது அவனது அடியார்கள் அவ்வாறு தானே இருப்பார்கள். ஆயினும் உலகப்பொருட்களின் மேல் விருப்பு வெறுப்பின்றியும் இருமையைக் கடந்து ஒருமையில்

நிலவும் அடியவர்கள் அனைவரும் ஒருவகையில் பற்றுக்கொண்டவர்களே. ஆனால் எதில்? இறைவனின் மலர்ப்பாதம் பற்ற வேண்டும் என்ற பற்றேஅது. இறைவன்மேல் மாறாத அன்பு பூண்டொழிகியபடியால் அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் எதுவரினும் அதைத்துறக்க அவர்கள் தவறியதில்லை செல்வமோ, புகழோ எதுவாயினும் உடனே அளித்து விடுவர். மனைவியை அடியார்க்குக் கொடுத்தும், குழந்தையை அரிந்து கறி சமைத்தும், தந்தையின் கால்களை வெட்டியும், கல்லால் எறிந்தும்; காலால் உதைத்தும் நிலையாப் புகழ்பெற்ற அடியார்களின் வரலாற்றுக் காப்பியங்களைப் பெரிய புராணத்தில் கண்டின்புறலாம். உலகக்கண் கொண்டு நோக்குவார்க்கு இச்செயல்கள் கொடூரமாகத் தோன்றும். செப்பற்கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்யகழல் பற்றி, எப்பற்றினையும் அற எறிவர்களான மேன்மக்கள் இறைவன் திருவடியைத் தமது பற்றற்ற செயல்கள் மூலம் பரவினார்கள். ‘அகிலலோகமும் பொருள் முதற்றுமெனும் அளவில் புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்தவர்களாகையினால் அவர்களுக்குத் தங்களையோ, சார்ந்தவர்களையோ, பொருள்களையோ இழப்பதில் வியப்பொன்றுமில்லை. வள்ளுவனாரின் ‘பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றவிடற்கு’ என்ற குறளின் கருத்து இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.

இறைவன் பற்றற்றவன். வேண்டுதல் என்பது வேண்டப்படாதவன். அடியார் வேண்டத்தக்கதை அறிந்தவன். அவர்கள் வேண்டிய முழுவதையும் தருபவன். ஆனால் மலங்களில் உழலும் ஆன்மாக்கள் உலகப்பற்றை விடாப்பிடியாகக் கொண்டு இறைப்பற்றை மறந்து விடுகின்றன. தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்புக்களிலும் அரிதாகிய மானிடப்பிறப்பின்மூலமே இறைவன் திருவடியைக்கண்டு இன்புற்று, உணர்வுடன்வழிபட்டு, பேரின்பநிலையெய்தி மற்றீண்டுவாராநெறிக்கு வழிதேட இயலும். இக்கருத்தினைத்தான் அடியார்களின் வரலாறுநமக்குச் செயல்முறையில்வலியுறுத்துகிறது. துன்பங்களினின்றும் முழுமையாக நீங்க வேண்டுமாயின் பிறவியை வேரறுக்கவேண்டும்; பிறப்பை அறுக்கவேண்டின் பிறப்பினுக்கும்

பிறருக்கனவேண்டவேண்டும் அவ்வாறு பிறந்துவிட்டாலும் இறைவன்திருவடி இமைப்பொழுதும் நெஞ்சினின்றும் நீங்காதிருக்க வேண்டும் என்பதே அடியவர்களின் கொள்கை, 'நள்ளிருளில் நட்டம் பயின்றுடும் நாதனின் பொற்கமலப் பாதங்களைக் காண' 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று அப்பர் பெருமான் வேண்டுகின்றார். மேலும் 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடியென் மனத்தே வழுவாதிருக்கவரந்தரவேண்டும்' என்றும் இறைஞ்சுகின்றார்.

காரைக்காலம்மையார் இறைவனை நேரில் கண்டு அம்மையே என்று அவரால் அழைக்கப்படும் பேறு பெற்றவர். அவரே இறைவனிடம் பொன்னும், பொருளும், போகமும் இரக்காமல், இறவா இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார். ''பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி, அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க'' என்று வேண்டுகின்றார். மானிடர்களாகிய நாம் இறைவனை வேண்டும்போது, சொத்து, சுகம், வெற்றி இவற்றைக்கொடு என்று வேண்டுகின்றோமே அன்றி, 'நின்னருள் நனி சுரக்கவேண்டும்' என்று வேண்டினோமில்லை. 'வேண்டுதல்' என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளில் வந்தாலும் முக்கியமாக இறைவனிடம் வேண்டிப் பெறல் என்ற பொருளே சிறப்பானது.

''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (குறள் 37-3)

பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு இவையால் துன்பம் வருதலான் பிறவாமை வேண்டும் என்றும் மற்ற இன்பங்கள் வேண்டாமலேயே வந்து துன்பம் தரும் என்பதே இக்குறளின் கருத்து. திருக்களிற்றுப்படியார் என்னும் நூலில் இக்கருத்து எடுத்தாளப்பட்டு 'வேண்டுமிடத்துப் பிறவாமையே வேண்டவேணுமென்று திருவள்ளுவர் சொன்னபடியினாலே வேண்டுமானால் அந்தப்பிறவாமை யொன்றுமே வேண்டுவது;விரும்பாமையை விரும்ப விரும்பினது வருமென்றும் அவர் சொன்னபடியினாலேயே, நம்மை விரும்பின கர்த்தாவினிடத்திலே விரும்பாமையை விரும்பிக் கேட்பாயாக' என்று விளக்கம் கூறப்பட்

டுள்ளது. மாணிக்கவாசகப் பெருமான் விரும்பாமை யாவை என்று இறைவனிடம் விரும்பிக் கேட்கின்றார். 'திருக்குற்றாலத்து வீற்றிருந்து கூத்தாடுதலைச் செய்வோனே! நின்னையல்லாது எனக்குத் துணையென உற்றாரையும் வேண்டுகிலேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்; உன்நற்றாள் தொழாது பல நூல்களையும் கற்றவரேனும் அவரையும் வேண்டுகிலேன்; அவர்பாற் கற்பனவும் இனி அமையும் கன்றையுடைய பசுவின் மனம் அக்கன்றின் மேலேயே உருகிக் கசிந்து நிற்பது போலயானும் உனது ஒலிக்கின்ற கழலையணிந்து திருவடிக்கே உருகிக் கசிதலை வேண்டுவன். இராமலிங்க சுவாமிகளும் நேர்முகமாகவும் எதிர்முகமாகவும் எதைக் கொள்ளவேண்டும், எதைத் தள்ளவேண்டும் என்பதை 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும்' என்று நயம்படக் கூறுகின்றார்.

எனவே உலகில் உய்யவந்த நாம், நாம்தான் உலகை உய்விக்கவந்தோம் என்றுஎண்ணாமல், வேண்டுதல்வேண்டாமையினால் பீடிக்கப்படாமல், மற்றுப் பற்றின்றி இறைவனின் திருப்பாதமே மனம் பாவித்து உலகப் பொருட்கள் எல்லாம் அவன் அளித்தது என்று அறிந்து அவற்றின் மூலம் அவனை அடையப் பயன்படுத்திக்காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப் பேணும் அடியார்களின் வழிச் சென்று 'அவனருளாளே அவன்தாள் வணங்கி' அஞ்ஞானத்தை அகல்வித்து ஆராத இன்பம் பெற்று பல்லோரும் ஏத்தப் பணிந்து சிறந்து வாழவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொள்வோம்.

உ

*சிவ சிவ*

**சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே அடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.**